**KALANILAYAM** தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V 7. No. 10. 8 மார்ச் 1934.

M211,N28K
N34.7.10
199160

245

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

6- JUN 1934

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7] 1934 ஞு மார்ச் மீ 8உ [No. 10

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 145

2. தமிழ்ப் பாடம்
வில்லிபாரதம்--கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 147

3. சூளாமணி (நகரப்படலம்)
வித்துவான் T.P. மீனாக்ஷிசுந்தரம் M.A.B.L. 150

4. அப்பர் (64 கலை-இதிகாசம்-கந்தன் சரிதை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 152

5. மதுரைக் கோவை. (சேட்படை)
S. வையாபுரிப் பிள்ளை, B.A.B.L. 154

6. ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை
(தரமா நீ மகிமபொகட)
P. B. ஸ்ரீநிவாசாச்சாரியார், B. A. 155

7. கம்பராமாயணம்—(அநுமப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 156

8. செல்வமில்லாக் குறை (சிறு கதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 158

9. வர்த்தமானம் 160

## க லா நி ல ய ம்

### கல்சரின் அவசியம் 3.

சென்றநாள் செப்பியபடி எந்திரங்களினிடம் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையே நம்மை அந்தத்தில் துரோகம்செய்துவிடப் போகின்றது. எந்திரம் என்று நாம் இங்கு உரைத்துவருவது நெசவு முதலிய பல தொழில்களுக்கு உரிய கருவிகளைமாத்திரம் கருத்திற் கொண்டன்று. ஏதேனும் ஒன்றைப்பெறுவதற்கேனும் செய்து அமைப்பதற்கேனும் கருவியாய் அமைகின்ற யாவும் 'எந்திரம்' என்னும் அச்சொல்லில் அடங்கும். விடுதலை, சுதந்திரம் என்னுமிவை எந்திரமன்றி வேறு என்ன! ஜனத்தொகை, சுகாதாரம் முதலியவைகளும் இந்தக் கருத்தின்படி எந்திரங்களே. மதச்சங்கங்கள், பொதுஸ்தாபனங்கள், அரசாங்கங்கள் ஆகியவைகளும் எந்திரங்கள்தாம். செல்வமும் ஒரு எந்திரமே. இவைகளில் நாம் நம்பிக்கைவைப்பது ஆபத்திற்கிடமானதென்றுரைப்பது அவை தம்வரையில் தீங்கையே செய்யுமெனுங் கருத்தினாலன்று. நாம் நம்பிக்கை வைக்குந் தன்மையிற்றான் ஆபத்துநேர்வதற்கு இடம் ஏற்படுகின்றது. இவைகளினால் நாம் நற்பயன் பெற வேண்டுமாயின் அவைகளை எந்திரங்கள்தாம் என்று அறிந்து எந்திரங்களாகவே கையாளல் முறையாகும். நாமோ, வேறு ஒன்றிற்குக் கருவியே யிவை என்னும் உணர்வைப் போக்கினவராய் மருட்டோர் முறைக்கிணங்கிக் கருவிகளையே செம்மைசேர் சீர்மையெனத் தீர்ந்துவிடுகின்றோம். கருமம் இன்னதென்று தெரிந்து கொள்ளாமலே கருவிகளைப் பாராட்டுகின்றோம். கருமத்தின் நோக்கம் சிறிதிருப்பினும் அதற்கு அநாவசியமான அளவு கருவிகளைப் பெருக்குகின்றோம். எல்லோரும் இப்பொழுது இத்தகையஎந்திரங்களையமைப்பதுவே முடிவான கருமம் என்று விவகரித்து வருகின்றனர். சிற்சிலர் வாயிலே வருகின்றசொற்கள் அக்கருவிகளுக்கு மேம்பட்ட ஒரு நோக்கத்தைஉடையன போலத் தோன்றலாம். ஆயினும் அவைதாம் பெரும்பான்மை வெற்றுரைகள் என்பது அவர்செய்யுங் காரியங்களை நுணுகி ஆராய்ந்தால் தெரியவரும். நாட்டிலுள்ள வறியோர்தம்துயர்நீங்க வியாபாரமும் கைத்தொழிலும்வளரவேண்டுமென்பர். இவ்வளர்ச்சிக்குஇடையூறு செய்கின்றவோர் அந்நிய அரசாட்சியின்சட்டங்கள்செல்லாதபடி அரசியல் அமைதல்வேண்டுமென்று கூறுவார். இப்படிச் சொல்லுகின்றபோது வர்த்தகம் கைத்தொழில் அரசியல் முதலியன, மேலானவோர் நோக்கம் நிறைவேறுவதற்குக் கருவிகளாய்க் கருதப்படுவன போன்றே தோன்றுகின்றன. ஆயினும் அவ்வாறு உரைத்த காரியங்களை ஊக்கமோடு முயல்கின்றவர்களின் பெரும்பகுதியோர்செய்கின்றசெயல்களை உற்றுப் பார்த்தால் இம் மாநுடமனத்தின் விபரீதங்கள் பலவற்றைக்காணலாம். சங்கங்கள்சேர்வர்; கட்சிகள் அமைப்பர்; மகாநாடுகள் கூடுவார். பத்திரிகைகள் நடத்துவார். இந்த எந்திரங்களை ஓட்டுவதற்கு மிகுந்த பணவுதவியும் ஏனைய சில உபகாரங்களும் சிற்சில சமயம் செல்வந்தர்களாயிருப்பவர் செய்வார். அந்நியநாட்டிற்குச் சென்று சட்டியும் செங்கல்லும் தோலும் துணியும் செய்வதற்குரிய புதியமுறைகளைக் கற்றுக்கொண்டு வருவதற்குச் சில இளைஞர்களை அனுப்புவார். அவர் கற்றுவந்து இங்குத் தொழிற்சாலைகள் அமைத்து அதன்மூலமாய் இந்தியாவின் பணம் வெளிநாடுகளுக்குப் போகாமல் தடுத்துத் தொழிலாளிகளுக்கு வேலை கிடைப்பதற்கொத்த வசதிகளும் ஏற்படுத்தி வறுமையின் கொடுமையை விலக்குவதற்

கான முயற்சி இவை என்று சொல்கின்ற வரையில்
நோக்கத்திற்கேற்ற கருமமும் கைப்பொருள்செலவும்
செய்வதாகவேவெளிப்பார்வைக்குக்காணப்படலாம்.
எனினும், இவ்வெந்திரங்களை அமைப்பதும், அவை
களைநடத்துவதும், அமைத்து நடத்துவதில் போட்டி
கொண்டு தோல்விவெற்றிகளைக்கணக்கிடுவதும் ஆகிய
இத்தகையவைகளே அன்னவர் சிந்தனையில் செறிந்தி
ருக்கும்; இவைகளால் நீங்கவேண்டிய வறுமையைப்
பற்றிய நினைவு, உண்டோ இல்லையோ என்னும்படி
அவர் எண்ணங்களுக்கப்பால் வெகுதூரத்தில் விலகி
நிற்கின்றதாகின்றது. அவ்வாறு அன்றெனின், மற்ற
வர் வறுமைக்கே முற்றிலும் இரங்குபவர் இவராயின்,
இவ்வெந்திரங்களின்மூலமாய்ச் சுற்றிச்சுற்றிச்சுழன்
றுசெய்கின்ற உதவி ஒருபுறமிருக்கத் தாமே நேராகத்
தம் கைப்பொருளனைத்தையு மல்லாவிடினும், இய
ன்றஅளவு, நாடோறும் தம் 'கிளப்புகளில்' செய்யும்
வீண்செலவில் ஒருசிறு பகுதியையேனும், எடுத்துக்
கொடுத்து வறியவர்படும்வருத்தத்தைத் தீர்க்கத்தான்
தலைப்படமாட்டாரோ. நாம் முன்சொல்லிய எந்திர
முறைகளில் ஈடுபட்டிருக்கும் எண்ணிறந்த செல்வ
வந்தர்கள் எத்தனைபேர் இதனைச் செய்யலாகின்றனர்
என்று கணக்கெண்ண நம் ஒருகையில் இருக்கின்ற
விரல்களே மிகை. இவ்வாறு சொல்வதால்,இன்னவர்
அனைவரும் தாம் இந்தியநாட்டின் வறுமையை நீக்கு
வதற்குப் பற்பலவழிகளில் பாடுபடுவதாகவிளம்புவத
னைத்தும் மோசவார்த்தைகளே என்றும்,இந்தமோச
த்தால் ஏதோ சுயலாபம்கருதுகின்றனரென்றும் நாம்
மதிப்பாகக் கொள்ளவேண்டா. மோசக்கருத்துடன்
இப்படி விவகரிப்பவர் சிற்சிலரே. ஏனையோர் எந்திரத்
தால் மோசம் செய்யப்பட்டிருப்பவர்; அவரே வஞ்
சகரல்லர்.

ஒருவருக்கு மோட்டார் ஓட்டி ஒருவன் வேண்டி
யிருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். ஒருவன்
அவ் வேலைவேண்டி வருகின்றான்; "உனக்கு என்ன
சம்பளம் வேண்டும்" என்று கேட்கின்றார். ஐம்பது
ரூபாய் வேண்டுமென்கின்றானவன். "ஐம்பது ரூபாய்
அதிகம்; முப்பத்தைந்தே தருவேன். காலையில் நீ ஆறு
மணிக்கு வரவேண்டும். இரவில்நான் 'கிளப்பி'லிருந்து
வருவதற்கு நேரமாகின்றதென்று முணுமுணுக்கப்ப
டாது. நாள்தவறாமல் வரவேண்டும்! உனக்குத் தலைவ
லியென்றும், பிள்ளைக்கு நோயென்றும், மனைவிக்குச்
சுகமில்லையென்றும் சொல்வதைக் கேட்கமாட்டேன்.
ஒருநாள் நின்றால் மூன்றுநாள் சம்பளம் போயிற்று.
சம்மதமானாற் சொல். நீ இல்லாமற்போனால் ஆயிரம்
பேர்" என்று சொல்லிச் சம்பளத்தைக் குறைக்கவும்
நிபந்தனைகளைப் பெருக்கவும் பார்ப்பதேதான் தக்கது
என்று அச் செல்வவந்தர்தம் மனத்தில் இயற்கையா
கத் தோன்றுகின்றது. இப்படிக்கின்றி, "அப்பா, நீ
எத்தனைபேருக்கு உணவும் உடையும் கொடுத்துக்
காப்பாற்றவேண்டியவனா யிருக்கின்றாய்? மக்கள் எத்
தனை? பெற்றோர் உளரோ? வேறுயாரேனும் உன் ஆத
ரவில் இருக்கின்றனரோ?" என்று விசாரித்து, அவன்
மனைவியும், குழந்தைகள் அறுவரும், பெற்றோர் இரு
வரும், தங்கைமார் மூவரும் அடங்கிய வொருகுடும்
பத்தைத் தன் வருவாயைக் கொண்டு நடத்தவேண்டி
யவனா யிருக்கின்றான் என்பதைத் தெரிந்துகொண்டு,
"ஆயின் ஐம்பது ரூபாய் போதாது, எழுபத்தைந்து
தருகின்றேன்" என்று அளிக்கவேண்டுமெனும் எண்
ணம் நேர்கின்ற புதுமையைக் காண்பது அரிது. இவ
ருக்கோ கிளப்பென்றும் கூத்தென்றும் ஆகின்ற ஒரு
நாள்செலவு குடும்பமொன்றை ஒருமாதம்காப்பாற்ற
க்கூடியதாயிருக்கும். எனினும் அந்தத்தனிஏழையின்
வறுமையினளவைக் குறைக்கவேண்டும்என்னும் சிந்த
னை உதித்திடாத இவரே, அடுத்தநிமிஷம் தேசத்தின்
முன்னேற்றத்தின்பொருட்டு உழைக்கின்ற ஒரு பத்
திரிகைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுப்பார்.
ஏனெனில் அது எந்திரம். மகாநாட்டின் செலவிலே
பாதி தான் ஏற்றுக்கொள்வார்; ஏனெனில் அது எந்
திரம். இன்னபடி எந்திரவாசனை தரக்கூடிய விஷயங்
களுக்கெல்லாம் உதவிசெய்ய உண்மையாக முன்வரு
பவராவர். கலியாணத்திற்கும்,கோவில்கள் கட்டுவதற்
கென்றும் செய்கின்றயாசகங்களுக்குங் கொடுப்பார்-
ஏனெனில் தானதருமம் என்பது எந்திரமுறைக்குள்
அடங்கியிருக்கின்றது. பிச்சைக்காரர்களுக்குஏற்பாடு
செய்ய ஒருஸ்தாபனம் அமைத்தவுடன், அது எந்தி
ரச் சாயல் பெற்றுவிட்ட தாகையால், அதற்குப் பொ
ருளுதவி செய்வார். மற்றுத் தன்னிடம் வேலைதேடி
வருபவனை எப்பொழுதும் அதிகச்சம்பளம் கேட்கி
றானென்றே அவர்கருத்தில்தென்படும். "உன் வறுமை
யைநீக்க ரூபாய் ஐம்பது போதாது, எழுபத்தைந்து
எடுத்துக்கொள்", என்பதில் எந்திரசகாயம் ஒன்றும்
இல்லையாகையால், அந்தச்சொல் அவர்வாயில் வருவ
தற்கு வழியில்லாமற் போகின்றது. தேசத்தின் வறு
மையைத் தீர்ப்பதே அவர் நெருங்கிய நோக்கமாயின்
இந்தியாவில் இருக்கும் இவ்வளவு கோடி ஏழைகளில
ஒருவனது வறுமையையாகிலும்தடுப்பதற்கு வாய்த்த
இச்செவ்வியை வாளா விட்டிருக்கமாட்டார். மற்று,
மோட்டார் ஓட்டுகின்றவர்கள் சேர்ந்து தம்முடைய
"முன்னேற்ற" த்திற்காக ஒரு சங்கம் கூடுவார்களா
யின் அப்பொழுது இவரே அச்சங்கத்தின் போஷக
ராகவும் தலைவராகவும்நிற்க இசைவதைக் காணலாம்.
கமிட்டிகள் ஏற்படுத்தித் தருவார். மூலதனம் தானும்
கொடுத்துப் பிறரிடமும் வாங்கித் தருவார். "தினத்
திற்கு ஆறுமணி நேரத்திற்மேல் நாங்கள் வேலைசெய்
யமாட்டோம். அறுபது ரூபாய்க்குக் குறைந்த சம்ப
ளத்திற்கு ஒருவனும் அமரக்கூடாது. அப்படி யாரா
வது அமர்ந்தானானால்........" என்று இன்னவாறு
பல நிபந்தனைகள் அமைத்துத் தருபவர் அவரேயாகி
யிருப்பார். ஏனெனில், இப்பொழுது இது எந்திரம்
ஆகிவிட்டது; ஆகையால் விஷயம் வேறு.

இன்னபலநிகழ்ச்சிகளை ஆழ்ந்து உன்னுவோர்க்கு,
மனிதர் இக்காலம் முடிவாயநோக்கத்தைக் கைவிட்டு
எந்திரங்களையே கும்பிட்டு விவகரிப்பதன் உண்மை
எளிதிற் புலப்படும். இத்தகைய ஒரு நிலையில் நமக்குக்
கல்சர் செய்யவல்ல உதவி சொல்லுந் தரமன்று. வறு
மையென்றும் செல்வமென்றும் விடுதலையென்றும்,
அடிமையென்றும், சுகம் என்றும் துக்கமென்றும்,
மேன்மை என்றும் தாழ்மையென்றும், ஆரோக்கியம்
என்றும் நோய்நிலை என்றும், சுதந்திரம் என்றும்கட்
டுப்பாடென்றும், இன்னவிதம் உலகவிவகாரங்களை
வேறுவேறாகப் பிரித்துப்பார்க்கின்ற பழக்கம் கல்சரு
க்குஇல்லை. பகுத்தறிவு மனோபாவம் என்னும் அதன்
இருகண்களும் சீர்பெற்ற செம்மைஎன்னும் ஒன்றை
யே நோக்கியிருக்கும். செம்மையைக் காணவிடத்துக்

199160
m21,N21KN



கடவுளின் கருத்து அங்கு நடைபெறநேரவில்லை என்
பதை ஓர்ந்துகொள்ளும். இருப்பு எந்திரங்களேனும்,
ஸ்தாபன எந்திரங்களேனும் எப்பொழுதேனும் எத
னையேனும் எவ்விடத்திலேனும் செம்மைசெய்து வை
த்துளதோ! இல்லையே! இது பிரசித்தம். ஆயினும் கல்
சரிலாதார், எந்திரஅமைப்பின் பிழையென்றும் அத
னை ஓட்டுவோர் பிழையென்றுங் கருதி மேன்மேலும்
அதன்மேல் விழைந்து விழுந்து எந்திரத்தைச் செப்ப
னிடமுயன்று தாமே சிக்கிக்கொள்வதுமல்லாமல் மற்
றவர்களையும் சிக்கவைத்துவிடுகின்றனர். எந்திரத்தின்
சக்கரம் மெள்ளமெள்ள அரைக்கத் தலைப்படும்போது
அதன் பல் பட்டுக் 'கறகுற' என்பதால், திறக்கின்ற
வாயைக் களிப்புமிகுதியால் விளைகின்ற சிரிப்பென்று
எண்ணிக்கொள்வது மிகவும் பரிதாபகரமான நிலை.
இவ்விதம் நமன்வாயில் களிக்கின்ற நம்மைச் சிதைவு
றாமல் கைதந்து கரையேற்றவல்லது கல்சரென்னும்
அத் தத்துவமன்றிப் பிறிதொன்று இலது. அவரவர்
தம் இஷ்டப்படி சொல்வதற்கும்செய்வதற்கும் ஏற்ற
வோர்எந்திரத்தைச் சுயேச்சை என்று எண்ணி மகிழ்
கின்றோம்.தன்னுடைய இஷ்டப்படிசொல்லவும்செய்
வும் ஏற்பட்டுவிட்டால் சுயேச்சை என்னு மவ்வாசை
பூரணமாய்விட்டதென்று எண்ணுவதன் எளிமையை
எடுத்துக்காட்டவல்லது கல்சர் ஒன்றே. தன் இஷ்டப்
படி சொல்கின்றவனும் செய்கின்றவனும் அவ்வாறு
சொல்லும்போதும் செய்யும்போதும், சொல்லத்தக்க
வைகளையும் செய்யத் தக்கவைகளையும் மாத்திரமே
சொன்னானென்றிச் செய்தானென்றிச் சீர்பெருகும் செம்
மையில் சிந்தனையை நாட்டியுள்ள கல்சர், சுயேச்சை
பூரணமாயிற்றென்று மதித்துஉழல இடந்தராது. பச்
சைக்குழந்தை என்ற தன்மை வயதளவால்மாத்திரம்
ஏற்படுவதொன்றன்று.பச்சைமனிதர்களும்இருக்கின்
றனர். இத்தகைய பச்சைமனிதன் தனித்தனியாகவும்
சிற்சிலர் ஒன்றுசேர்ந்தும்தமக்குஉரியமுறைகள் இவை
என்று மனம் போனபடியெல்லாம் விரும்பும் வண்
ணம் விடாமல் உண்மையிலே, அழகும் நன்மையும்
தண்மையும்நேர்மையும்வாய்ந்தவைகளின்பால்உணர்
வைச் செலுத்தி இப்பச்சைமனிதர் அவைகளைவிரும்
புமாறு ஆக்கிவைக்கின்ற தூயதோர் திறம் கல்சருக்கு
உளது. மேனாடுகள் ஐசுவரியமுள்ள நாடுகளென்றும்,
நாமும் அவர்களோடு இச்செல்வத்தால் சரியாசனம்
அமரவேண்டும் என்றும் சிலர், ஐசுவரியத்தில் அதன்
அளவிலேயே சுகம் உளதெனும் மனப்பால் மறவாப்
பச்சைமனிதர், உரைக்கின்றனரே. நம்முடைய பெரு
மையும் நலங்களும் செல்வத்தின் அளவினால் சாதிக்க
ப்பெறும் என்று தம்உயிரையும் கருத்தையும் அதற்
கே பகர்ந்திருக்கின்றவர்களைக் கல்சரானது நமக்குக்
காட்டி, "ஐயா,இந்தச் சனங்களைச்சிந்தித்துக்கொள்;
அவர் தம்முடைய வாழ்க்கையை நடத்துகின்ற வழி
களையெல்லாம் பார், அவர்வழக்கங்களையும் நடவடிக்
கைகளையும் பார். அவர்பேசுங் குரலைத்தான் உற்றுக்
கேள்; அவர் நிற்பதையும் நடப்பதையும் கவனித்துப்
பார். அவர் விரும்பிப் படிக்கின்ற புத்தகங்களைக் கவ
னி. அவர்கள் களிக்கின்ற விஷயங்களை நன்றாகச்
சோதித்துப்பார்; அவர் வாய்நின்று வருகின்ற வார்த்
தைகளைக் கேள். அவர் மனத்தில் நிறைந்திருக்கின்ற
எண்ணங்கள் எத்தகையன என்பதைக் கவனித்துப்
பார்........செல்வம் உடையவராயிருப்பதால் இப்
படியெல்லாம் ஆகிவிட்ட இவரைப்போல் நீயுந்தான்
ஆகவேண்டும் என்ற நிபந்தனையோடு எத்தனைப் பண
ந்தான் கொடுத்தாலும் ஏற்கவொண்ணுமோ" என்ற
வெறுப்பினை யெழுப்பித்தரும். அப்பொழுது, செல்
வமும் ஓர் எந்திரமேயன்றி அதுவே செயப்படு பொ
ருள் ஆகாதென்பது தோன்றித்தோன்றி வளர்வதா
கிக் கருத்துமுற்றக் கடவுளின் சித்தத்திலே இணங்
கித் தோய்ந்தவச் செம்மை நிலையை எய்துவோம்.
அஃதொன்று எய்தினாலன்றி உய்வதில்லை. மற்றவெல்
லாம் அஞ்சுவதும் அஞ்சவருவதுமேயாகின்றன அல்
லவோ!

## தமிழ்ப்பாடம் 110.

### வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[133-வது பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள
விருந்ததற்பின் பரிவினோடும்
தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங்
கைதொழுது சினங்கொள் வேலா
னீத்தநெடுங் கடலெழுபா ரடலைவர்
பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ
கோத்தருமந் தனிலாண்மை கூறுதோ
கூறுகநீ கொற்ற வேந்தே 21.

கண்ணன் சென்று உரைத்தாலும் துரியோதனன்
நாடுகொடுக்கமாட்டான் என்ற கருத்தில் அர்ச்சுனன்
கூறுகின்றசெய்யுள் ஒன்று இதன் முன்விடப்பட்டது.
இச்செய்யுளில் நகுலன் தனது எண்ணத்தைத் தெரி
விக்கத் துவக்குகின்றான்.

பதவுரை.

பார்த்தன் - அர்ச்சுனன், இவை - இவ்வார்த்தை
களை, புகன்று - சொல்லி, இறைவன்-கண்ணபிரான்,
பணித்து அருள-கையமர்த்தியருளவும், இருந்ததன்
பின் - உட்கார்ந்தபின்பு,

சினம் கொள் - கோபம் மிகுந்த, வேலான் - வே
லாயுதத்தையுடையவனாகிய நகுலன், தீர்த்தன் - கண்
ணனது, இருபதம் - இரண்டு பாதங்களையும், இறை
ஞ்சி - வணங்கி, தருமனையும் - தருமபுத்திரனையும்,
கைதொழுது - கைகூப்பித் தொழுது,

நீத்தம் - நீர்மிகுந்த, நெடும் - பெரிய, கடல் - கட
லால் சூழப்பட்ட,எழு பார் - ஜப்பு பிலக்ஷம் குசம்
கிரௌஞ்சம் சாகம் சால்மலி புஷ்கரம் என்னும்
ஏழு தீபங்களையுடைய பூமியையும், அடல்-வலிமை
பொருந்திய, ஐவர் - பாண்டவர்கள், பெறுவர் -
அடைவார், எனும் - என்னும், நிகழ்ச்சி - உலகத்
தார் சொல்லும் சொல், பொய்யோ-பொய்யாகுமோ,

கொற்றம் - வெற்றி பொருந்திய, வேந்தே - தரும
ராஜனே, கோ தருமம்தனில் - இராஜ தர்மத்திலே,
ஆண்மை - வீரம் பராக்கிரமம் தறுகண் முதலிய
இலக்ஷணங்கள், கூறுதோ - அரசர்களுக்கு வேண்டு

மென்று கூறப்பட்டிருக்கவில்லையோ, கூறுக நீ - நீயே சொல் (என்று மேலும் இயம்புவான்.)

விரிவுரை:—தருமனது கருத்திற்கு வேறுபட்ட இத் தம்பியர் மூவரும் தத்தம் வயதிற்குத் தக்கபடி வார்த்தையின் வன்மையைக் குறைத்து உரைத்தது கவியின் திறமையை நன்கு காட்டுகின்றது. அடுத்த தம்பியாகிய வீமன் தருமனைச் சிறிதும் மானமிலான் என்றும், அவனுடன் பிறந்ததால் தாம் பாழாயினர் என்றும் மறையாது இளிவரப்பேசியதுமன்றித் தன்னைத் தூதனாக அனுப்பும்படி பரிகசமும் செய்தான். இவனுக்குப் பின்னவனாகிய அர்ச்சுனன் "மாண்டார் போல் அது கண்டு மன்னவையில் யாமிருந்த மாசுதீர வேண்டாவோ" என்று முறையிட்ட சொற்கள் தருமனைப் 'பிணமே' என்று அழைத்ததாகும். எனினும் வீமனைப்போல், 'மானமிலான்' என்று படர்க்கையில் வற்புறுத்தாமல், 'மாண்டார்போல் நாம் இருந்த' என உளப்பாட்டுத் தன்மையில் தன்னையும் சேர்த்துக் கொள்வதால் அவ்வசையினது வன்மை ஒரு சிறிது மறைகின்றது. இவ்விருவருக்கும் இளையோன் நகுலன், 'கோத்தருமந்தனில் ஆண்மை கூறுமோ' என்னும் சொற்களில், 'போர்க்கோழைப் பேதை' எனத் தன் முன்னோனைக் கடிகின்றான். அதுவும் வீமனைப் போல்முன்னிலைப்படுத்தாமலும்அர்ச்சுனனைப்போல் உளப்பாட்டுத்தன்மையு மாக்காமலும் இராஜதர்மம் யாதென்று கேட்பான்போலச் சிறிதே கூர்மையோடு வசையை ஏவினான். மானமிலி என்றுபேசினான் வீமசேனன், பிணம் என்றான் அர்ச்சுனன், நகுலன் பேடி என்றான். இவர் தம் வயதிற்கு உரிய வரன்முறை இது வாயிற்று. பின், திரௌபதி, மாண்டார்போல் என்பதைமாத்திரம் விட்டுவிட்டுப் "பாண்டவரும் பார்த்திருந்தார்" என்பாள்.

---

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை
யமைத்தருளி நகுலன் சொல்லும்
இகல்விசயன் தன்மொழியுந் திறல்வீம
னியம்பியதும் யாவும் கேட்டோம்
புகலரிய வுணர்வுடையோய் புகழுடையோய்
திறலுடையோய் புகனீ யென்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றானே. 22.

கண்ணன் உரைத்தாலும் துரியோதனன் இணங்கானென்றும், உருப்பசியைக் கவர்ந்து சென்ற கேசியென்னும் அசுரனை வென்று அவ்வணங்கை இந்திரனுக்கு மீட்டித்தந்த புரூருவனது மரபில் வந்த தாம் தம் மனைவிக்கு உற்ற பழியைத் தீர்க்காமலிருப்பது பேதைமையென்றும், தானொருவனே நின்று பகைவரை வெல்லக்கூடிய ஆற்றல் உடையோன் என்றும் முறையே இந்த நகுலன் இயம்பிய மூன்று செய்யுள்கள் இதன்முன் இங்கு விடலாயின. இச்செய்யுளில் கண்ணன் சகாதேவனது எண்ணத்தை உரைக்கும் படி வேண்டிக்கொள்ளுதல் கூறப்பட்டுள்ளது.

பதவுரை

நகுலன் - நகுலன், இவை - இவ்வார்த்தைகளை, உரைத்ததன்பின் - உரைத்த பிறகு, (கிருஷ்ணன்) நன்று என - நல்லது என்று, கை அமைத்து அருளி - கையமர்த்தி அருளிவிட்டு, (பிறகு சகாதேவனைப் பார்த்து,)

புகல் அரிய - சொல்வதற்கு அருமையான, உணர்வு உடையோய் - மெய்யுணர்வு உடையவனே, புகழ் உடையோய் - கீர்த்தியை உடையவனே, திறல் உடையோய் - பராக்ரமம் உடையவனே,

நகுலன் சொல்லும் - நகுலன் சொன்னவைகளும், இகல் - பகை மிகுந்த, விசயன் தன் - அர்ச்சுனனது, மொழியும் - சொற்களையும், திறல் - ஆற்றல் மிகுந்த, வீமன் - வீமசேனன், இயம்பியதும் - சொன்னவைகளையும் (தருமன் சொன்னவைகளையும்) யாவும் - எல்லாவற்றையும், கேட்டோம் - கேட்டோம். (இனி உன்னுடைய எண்ணத்தை) நீ புகல் - நீ சொல், என - என்று (கண்ணன்) வேண்ட,

முகில் அனைய - மேகம் போன்ற, திருமேனி - அழகிய மேனியையுடைய, முகுந்தனுக்கு - கிருஷ்ணனுக்கு, மனம் உருக - மனம் உருகும்படி, மொழிகின்றான் - சகாதேவன் பின்வருமாறு சொல்கின்றான்.

விரிவுரை:—ஒருவன் உரை முடிந்ததும் மற்றவன் தானே யெழுந்து பேசத்தலைப்பட்டதுபோல் அல்லாமல் இச்சகாதேவன் தன்னை வேண்டும்வரையில் வாய் திறந்திலன். 'உணர்வுடையோய், புகழுடையோய், திறலுடையோய்' என்று கண்ணனாலேயே துதிக்கத்தக்கவனாய இவன், மற்றவரைப்போல் உலக இயல்பிற்கே உரியன உரைக்காமல் தத்துவஉணர்வினால் செப்புகின்றானதலின் இது கேட்கக் கிருஷ்ணனுக்கு மனம் உருகியது, என்கிறார் கவி. மற்றவர் உரைத்தவைகளைக் கேட்கக் கண்ணனுக்குக் காது புளித்ததோ, யாதோ!

---

சிந்தித்த படிநீயும் சென்றாலென்
ஒழிந்தாலென் செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென் வழங்கி னாலென்
கொந்துற்ற குழலிவள் முடித்தாலென்
விரித்தாலென் குறித்த செய்கை
யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத்
தெரியுமோ வாதி மூர்த்தி. 23

எது எவ்வாறாயினும் கண்ணனுடைய கருத்தே கைகூடுமாகையால் தம்முடைய முயற்சியால் சில செய்ய வேண்டுமென நினைத்தல் பேதைமை பெரிதுடைத்து என்பான் சகாதேவன்.

பதவுரை.

சிந்தித்தபடி - எண்ணியபடி, நீயும் - நீயும், சென்றால் என் - தூதுபோனாலென்ன, ஒழிந்தால் என் - போகாது விட்டால் என்ன ?

செறிந்த - அடர்ந்த, நூறு - நூறு, மைந்தர்க்குள் - புத்திரர்களுக்குள், முதல்வன் - மூத்தவனாகிய துரியோதனன், நிலம் - நமது ராஜ்யத்தை, வழங்காமல் இருந்தால் என் - கொடுக்க மறுத்துவிட்டால் என்ன, வழங்கினால் என் - கொடுத்தால்தான் என்ன ;

இவள் - இந்தத் திரௌபதி, கொந்து உற்ற - தன் சிக்குப்பிடித்த, குழல் - கூந்தலை, முடித்தால் என் - முடித்தால் என்ன, விரித்தால் என் - விரித்தே கிடந்தாலும் என்ன ;

ஆதிமூர்த்தி - பரமாத்வான கிருஷ்ணனே, குறித்த - நீ மனத்திற் கொண்டுள்ள, செய்கை - காரியமானது, அந்தத்தில் - கடைசியில், முடியும்வகை - எவ்வாறு முடியும் என்பது, (உனக்கே யல்லாமல்) அடியேற்கு - அடியவனாகிய எனக்கு, தெரியுமோ - தெரியுமோ.



விரிவுரை:—ஆதிப் பரம்பொருளே இக் கண்ணபிரான் என்றும், அவனன்றி யோரணுவும் அசையாது என்பதும் யாவருக்கும் தெரியுமாயினும் அகங்கார மமகாரங்களென்னும் மாயை சூழ்ந்து நின்று அவர்கள் தம் அறிவைப் பயன்படுத்திக்கொண்டு அதன்படி வாழ்க்கையைநடத்தவொட்டாமல்தடைசெய்கிறது. அந்த மாயையையும் வெல்லுமொரு வல்லமை மிகுந்த தத்துவஞானியாகிய சகாதேவன் ஒருவனே பாண்டவர்திறத்தில் அவனது அறிவிற்கு ஏற்றபடி மொழிகின்றான். ஈச்வரனே இருந்து ஒரு கருமத்தை நடத்திவைக்கும்பொழுது அவனது திருவுள்ளம் எவ்வாறு நாடுகின்றதென்பதை உணரலாற்றா மக்கள் இதனைச் செய்து இன்னது ஆகவேண்டும் என்று குணிப்பதெல்லாம் வீண், என்னும் உண்மை இங்கு உணர்த்தலாகின்றது.

---

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே
அன்றலகை முலைப்பா லுண்டு
மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே
யொருவருக்கும் தெரியாதிங் குன்மாயை
யானறிவே னுண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங்
கருத்தென்றான் றெய்வ மன்னன். 24

இங்குள்ளவர் எவருக்கும் அறிய இயலாத உனது மாயச்செயலை நான் அறிவேன்; எனவே, உனது திருவுள்ளக்கருத்து எதுவோ, அதுவே என் கருத்தும், என்று சகாதேவன் இச்செய்யுளில் கூறுகின்றான்.

பதவுரை.

முருகு - தேனை, அவிழ்க்கும் - சொரியும், பசுந்துளபம் - பசுமை பொருந்திய துளசியை, முடியோனே - முடியில் தரித்துள்ளவனே!

அன்று - நீ குழந்தைப் பருவத்திலிருந்த அந்நாள், அலகை - பூதகியென்னும் அரக்கியினுடைய, முலைப்பால் - முலைப்பாலை, உண்டு - குடித்து,

மருது இடை - மருதமரங்களுக்கு நடுவிலே, சென்று தவழ்ந்து, உயர் - உயரமான, சகடம் - சகடாசுரன் என்னும் அசுரன், விழ - விழும்படி, உதைத்து - உதைத்துத்தள்ளி, பொதுவர் - இடையர்களுடைய, மனை - வீட்டில், வளர்ந்த - வளர்ந்துவந்த, மாலே - திருமாலே;

இங்கு - இங்குள்ள, ஒருவருக்கும் - யாருக்குமே, உன் மாயை - உன்னுடைய மாயை, தெரியாது - தெரியாது.

யான் அறிவேன் - நான் ஒருவனே அறிவேன், (ஆதலால்) உண்மையாக - வாஸ்தவத்தில், உன் கருத்து எதுவோ - உன்னுடைய கருத்து எதுவோ, அதுவே - அதுவேதான், என் கருத்தும் - என்னுடைய கருத்தும், என்றான் தெய்வம் அன்னன் - என்று தெய்வத்தன்மையுடையவனாகிய சகாதேவன் கூறினான்.

விரிவுரை:—தான் குறித்த ஒரு செய்கையை நிறைவேற்றுவதே நோக்கமுடைய கண்ணன், "ஐவராம் அவனிபர்க்கு நினைவு ஏது" என்று வஞ்சனையாகக் கேட்டதற்குச் சகாதேவனும், திருவுளத்துக் கருத்தெதுவோ, அதுவே தனக்குங் கருத்தென்று குறிப்புணர்த்துகின்றனன். முடிகின்ற வரையில் நினைத்த கருமம் யாதென்று பிறர் அறிந்துகொள்ள இயலா வகைக் கருமங்களைக் கண்ணன் இயற்றுகின்ற மாயத்தினை, அவன் இளமையிலேயே, பூதகியின் பாலுண்டதையும், மருதிற்கிடையில் தவழ்ந்ததையுங் காட்டிக் குறிக்கின்றான். இது கருத்துடை அடையணி ஆகும்.

"மாதுலனாகியும் ஏதிலனான வஞ்சன் கம்சன் வரவிடுத்த பூதனை தன்னுயிர் போதரவுண்ட புயல்வண்ணு" என்று வில்லிபுத்தூரார் பின்னோரிடத்தில் கண்ணனை அழகாகத் துதித்துப் பாராட்டுகின்றார். நஞ்சு பூசிய முலைப்பால் கொடுத்துக் கண்ணனைக் கொல்லும்படி கம்சன் ஏவ வந்த பூதனையின் முலைகளை இக் கள்ளக் குழந்தை யாதொன்று மறியாததுபோல் இறுகப் பற்றி உறிஞ்சவும், அவள் கதறிவீழ்ந்து உயிர் துறந்த கதையை யாவரும் அறிவர்.

கண்ணனது 'விஷமங்களுக்கு'ச் சகியாத யசோதை அவனை உரலோடு கட்டிவைக்கக் கண்ணன் அவ்வுரலையும் உருட்டிக்கொண்டு, அடுத்தடுத்து வளர்ந்திருந்த இரண்டு மருதமரங்களுக்கு இடையே தவழ்ந்து செல்லவும், அதனால் அவ்வுரல் தடைப்பட்டு அம்மரங்கள் இரண்டும்முறிந்தன. குபேரனதுபுத்திரர்களாகிய நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் இருவர் ஆடையின்றித் தெய்வமகளிருடனே புனலாடிக்கொண்டிருந்த வேளையில் நாரதர் அங்குவந்திடவும் மாதர்கள் நாணமுற்று ஆடையையுடுத்து விலகினர். மதுமயக்கத்தால் இவ்விரு மைந்தர் மாத்திரம் மரம்போல் நிற்க நாரதர், "நீங்கள் மரமேயாக" எனச்சபித்து, அவர் வேண்டுகைக்கிணங்கி, "நெடுங்காலஞ் சென்றபின் திருமால் கிருஷ்ணனாக வந்து இச்சாபத்தைத்தீர்த்தருள்வார்" எனப் பணித்துப் போயினர். மருதாய் நின்றிருந்த அக்குபேரன் புதல்வர்களுக்கு அருள்புரியவே உரலோடு அவற்றிடைக் கண்ணன் நுழைந்தனன் என்பது கதை.

நந்தகோபனது மனையில் ஒரு வண்டியின்கீழ், தொட்டிலில் கண்வளர்ந்திருந்த கிருஷ்ணனைக்கொல்வதற்குக் கம்சன் ஏவிய அசுரன் ஒருவன் அவ்வண்டியின் சக்கரத்தில் ஆவேசித்தது அறிந்த இப்பிள்ளை அழுவதுபோல் பாதத்தைத்தூக்க வண்டி கவிழ்ந்து அசுரனும் மாண்டான், என்பது சகடு உதைத்த வரலாறு.

"இவ்வண்ணம் மாயம் பல பிள்ளைப்பருவத்திலேயே செய்தோனே, இப்பொழுதும் நீ செய்யும் இது மாயையே என்று யானொருவனே அறிவேன்; மாயை என்பது அறிவேனாயினும் அன்னதன் முடிவு யாதென எனக்குத் தெரியாது. ஆகையால் உன் கருத்தே எனது கருத்தும் என்றால்தான் உனக்கு யான் உண்மையை உரைத்ததாகும்" என மெய்யுணர்வுடைய சகாதேவன் கண்ணனுக்கு இங்குச் சாற்றினான்.

---

கம்பராமாயணம்:—பதவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு, முதலியவைகளுடன் ஸ்ரீ. வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றவை.

# சூளாமணி

[106-வது பக்கத் தொடர்ச்சி]

கருங்குவளை மலரின் உள்ளிடத்தைப் போன்ற கருங் கண்ணால் வீறு பெற்ற மகளிர்,மாளிகைமேலே நின்று தமது கூந்தலுக்கு நறும்புகையூட்டிக் கொண்டே உலவாநிற்கின்றனர். காலிலே பூண்டிருக்கும் அழகிய பூஞ்சிலம்புகள், அவர்கள் நடக்குந்தோறும் அன்னத்தின் குரலேபோல ஒலிக்கின்றது. கீழேசேவலன்னமும் பெடையன்னமும் இரைகொண்டு வருவதற்கு வெளியே பறந்துபோகையில் தமது இள அன்னங்களைத் தாமரையினிடையே வளர்த்திச் செல்ல, இனிதே தூங்கியிருந்த அவை இச் சிலம்பொலி கேட்டு விழித்தெழுகின்றன. அவ்வொலி, தம்தாயினது மெல்லிய குரலை நினைப்பூட்டுதலும், தம்மை யணைத்துச் சூடேற்றித் தழுவியிருந்த தம்அன்னையின் வெள்ளைச் சிறகை எண்ணி நைந்துருகி, "அப் பெடையன்னங்கள் தம்மைத் தத்தமக்குத் துணையான சேவலன்னங்கள் விட்டுப் பிரிந்ததால் புலம்பி யாற்றுகின்றனவோ? தாய் தந்தையர் ஒருவரை யொருவர் பிரிந்தனராயின் நம்மையும் பிரிவர் அன்றோ? அணைத்து ஊட்டிய நாளெலாம் முடிந்தனவோ?" என எண்ணமிட்டு மனங்கலங்கிக் குழம்பி மயங்குகின்றன. (11)

கீழுலகுவரை, ஆழ்ந்துஉள்ள நீர்நிலைகளில் குளிரப் பூத்துச் சிறந்த பூங்கொத்துக்களைப்பறித்துக் கூந்தலாலழகிய பெண்கள் சூடியதும், அக்கூந்தலின் ஊற்றின்பத்தால், மகிழ்ந்து உடல் வளர்ந்தனவாய் அக்கொத்துக்களிலுள்ள போதுகள் விரிந்து மலர்கின்றன. திருமுடியில் மலர் பூத்தபடி இது. இன்பத்திற்கு நிலைகளமாம் திருஅடிகளின் தகுதியை நன்குஅறிந்தவர், அத்தகுதிக்கேற்ற பொற் சிலம்பு பூட்ட, அச்சிலம்புகள் தம்மொடுபொருந்தி நிற்கும்பொருத்தத்தைநோக்கிக் கண்டவர் அந்தச் சிலம்புகளைக் கூடப்பிறந்ததோர் இயற்கையாகக் கொண்டு 'சிலம்படி' என்றே இயைபுபடுத்திக் கூறநின்ற அத்தகைய அடிகள் ஈதோ தெருவே நடந்து செல்கின்றன. தெருவெல்லாம் தாமரை பூத்துப்பொலியும் வியப்பு என்னே என்னே. அவ்வடிகளின் இயற்கைச் செம்மையோடு வேற்றுமையாதும் புலனாகதபடி அதனோடு இயைந்து பழகும்படியாகக் கைபுனையவல்லார் ஊட்டியசெம்பஞ்சுக்குழம்பு அவ்வடியின் குளிர்ச்சியால் உலராது நிற்றலின் அவர்கள் அரசத்தெருக்களில் பையப்பைய நடக்குந்தோறும் தாமரைபோன்றொளிரும்அடிச்சுவடுகள் அத்தெருவிடையே விளங்குகின்றன. நிலத்திடையேதாமரைபூத்த வியப்பின் நுட்பம் இதுவேயாம். முடியிலும் பூவைச் சூடி, மெல்லிய பூவும் மகிழ்ந்து மலர மலர்த்தி, மலரென நின்ற அடியோடு நடக்குமிடந்தோறும் அடித்தாமரைபட்ட இடத்தையும் அவ்வடியேபோலத்தாமரையாக மாற்றித் தாமரைப்பூவே தோன்றச் செய்து, எவற்றையும் தம்மைப்போல இன்பமாக்கி வைக்கும் மலருலக மங்கையரின் மலர்மண வாழ்க்கை இருந்தபடி ஈதே யன்றோ? (12)

செங்கழுநீர் மாலைசூடி மெய்யுணர்வு கொளுத்தும் மேலோர்தமக்கு அவ்வுயர்நிலையை அறிவுறுத்தியபின் அம் மாலையையும் அன்படையாளமாகத் தந்தருள, அச் செங்குவளைகள் களித்திருக்கின்ற காதலிமாரது கண்ணேபோலவிளங்குதலின்,காதலர்கள் மிகவிருப்புடன் தமது குடிமாலையாகச் சூடிப்பார்த்துப் பின்னர் மகளிரும்மெய்யுணர்வுபெறுமாறு அருளோடணிந்த நறுமணம் மிக்க குவளைமாலைகளையும், அக் குவளை வாடாது மலர்ந்துநிற்க நிலாக்கதிர் வேண்டுமாதலின், அதற்கெனச் சூடிய வெள்ளிய நிலாக்கதிர்க் கற்றை என விளங்கும் முத்துமாலைகளையும், பல்வேறுநிறங்களமைந்த பூக்களுக்கிடையே தம்முடைய கற்பினுக் கறிகுறியாக மல்லிகையைச் சேரத்தொடுத்து மகளிர் விருப்பமுடன் அணிந்திருக்கும் மாலைகளையும், தெருவே முக் கூட்டிலும், நாற் கூட்டிலும், காதலரோடு புலவிநுணுக்கத்தால் ஊடிநிற்கும் மகளிர் வீசியெறியும்போது பெருமைபொருந்தியஅவ்வகன்ற நகரிலே நிறையக் கிடத்தலின் கவர்பட்ட வழிதோறும் அவற்றைக் காணல் அரிய தொன்றன்று; எங்கும் காண்பதொரு காட்சியேயாம். குவளை அறநிலைநின்ற ஆண்மக்களின் அறிவொழுக்க மேம்பாட்டையும், மல்லிகை கற்புநிலைநின்ற பெண்மக்களின் அன்பொழுக்கமேம்பாட்டையும், முத்து அருணிலை நின்ற அவ்விரு திறமக்களின் பொருளொழுக்க மேம்பாட்டையும்,புலவிநுணுக்கத்தின் வீசியெறிந்த வீச்சு அவர்களின் அன்புநிலை நின்ற இன்பொழுக்க மேம்பாட்டையும் சுட்டுகின்றன வன்றோ. (13)

இவ் வெள்ளை மாடங்களினுள்ளே கிடக்கின்றவற்றைக் காண்மின். நறுமணமிக்க நீர் கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் என்ற முப்பழமும் ஊறிக்கிடத்தலால் நோய்க்கு இடங்கொடாமே இன்பமூட்டும் தண்ணீர், உண்டு களிக்கத்தக்க வகையில் சிறந்துபழுத்துக் கனிந்துள்ள தேனினுமினிய பலாச்சுளைகள், நறுமணத்தோடு விளங்குதலின் மணத்தையும் சுட்டும் வேரி என்பதனை யோர் பேராகக்கொண்ட தேன், வேறோர் அடையும் வேண்டாமல் தானே தனித்துச் சிறக்கும் மாவின் மிகக் கனிந்த பழங்கள், தேனெனும் இனிய காற்றைப் புகுத்திவைத்த வொரு கோலோ ஈதெனச் சுவைத்துண்பார் வியந்து போற்றும் கருப்பங்கோல்களின் தொகுதி, இவைகள் இனிமை கனிந்து வளர்ந்து நின்றனவேனும், இம்மாடங்களினுட் புகுந்தமையால் மற்றுமோர் வளர்ச்சி பெற்று அனைவர்க்கும் இன்ப அன்பூட்டுவான் அறம்பழுத்து அருள் கனிந்து நிற்கின்றன. காசு காய்க்கும் மரத்தைப்பற்றிக் கனுக் காண்பார் இவ்வினியபொருள்கள்பழுத்துநிற்கும் மரமெனும் இம்மாடங்களையேனும் காண்பான் செய்தாரன்றோ தோலாமொழித்தேவர். (14)

பொன்னாலும் நாட்டிலே, பொன்னுலாகிய நகரத்தே உருப்பொருள்கள் உள்ள இடத்தெல்லாம் பொன்னே கண்டோம். அழகு நிறைந்த பொற்றுகள்கள் மைந்தரும் மகளிரும் ஆடிப் பாடி அணைந்து மகிழ்வதால், மேலெழுந்து பறந்து இடைவெளியெல்லாம் நெருங்கி நிற்கின்றன. இடைவெளி வானும் இன்னவாறு பொன்செறிந்து இருட்கிடமின்றி ஒளிர்தலால், அந்நகரத்து மகளிரும் மைந்தரும் மாலை என்றும் காலையென்றும் வேறுபடுத்தி யறியமாட்டாமையால் இரவு பகலின்றி எப்போதும் இன்பந்துய்க்கின்றனர்.



இப்பொன்னும் இவ்வின்பமும் கண்டோர், இந்திரவுலகம் இங்கே கீழே இழிந்ததோ என்றுகருதி ஒப்புமை கொள்ளும்படியாக விளங்குகின்றன. (15)

நகரமும் நாடும் இத்தகையனவாயின் இந்நாட்டு அரசன் எத்தகையவன்? இவை யனைத்தையும் உயிருடைப்பொருளாக்கி உயிராய் ஒளிர்பவன் அவனேயாம். அதற்குத் தக்கவன் அவன் என்று கூறும்படி அழகுக்கழகாய் இயைந்த பொருத்தமே பொருத்தம். மன்னனுக்கு நகரம் உடைமை ஆவது இன்றி அம்மாநகருக்கே மன்னன் உடைமையாய் விளங்குகின்றான். நாடும்அரசனும் அனைத்தும்இயைந்ததேஅரசாதலின் அரசனை யுடைமையாக்குவ தன்றோ உயர்ந்த கருத்தாகும். இப்போ திருப்பார் எவரும் இவ்வரசனுக்கு இணையில்லாமையால் ஒற்றைக்குடையே காண்கின்றோம். இவனுக்கு முன்னும் பின்னும் வந்தோர் வருவோர் என்ற பலரினும் உயர்ந்தவனைக் கருத்தகத்தே அவன் தோன்றுதலின் அவன் குடையும் உயரொற்றைக் குடையாக, அதை யுடையவன் அவ்வகையில் என்றும் நிலைபெறுகின்றானாதலின் மன்னனாக மன்னுகின்றான். புகழாகிவிரிந்தஅறநிறமாம்வெண்ணிறங்கொண்ட அந்தக் குடை, அறவழி வளருகின்ற பொருட் சிறப்பின் வடிவாகிப் படைவெப்பம் இல்லாத செங்கோலின் தண்ணறுநிழலை எங்கும் பரப்பிநிற்கின்றது. அச்ச மென்பது இந்நாட்டில் எங்கும் இல்லை; அன்பேமிளிர்கின்றது. "மன்பதையின் தலைவன்" எனப்பொருள்படுகின்ற பயாபதி எனும்பெயரை இடுகுறியாக அவனுக்கு இட்ட பெரியோர், காரணம் கருதிய வழியும், அஃதவனுக்குப் பொருந்துமாற்றை யுணர்ந்தனரோ. அப்பெயரைத் தற்கிழமைப் பொருளாகக் கொண்டுள்ளான் அவ் வரசர்க்கரசன். தன் மணிமுடியைப் போலவே வெற்றிவேலையும் வேந்துநிலைக் கறிகுறியாகவும் அரசுநிலைக் கணிகலமாகவுமே கொண்டு விளங்குகின்றான். குத்திக்கொன்று வெற்றிபெறாமல் அவன் கையில் விளங்கிய நிலையானே அன்பு வெற்றி கொண்ட அவ்வேல் அவனுடைய வெற்றிக் கறிகுறியாவதோடு, அவ் வகையில் சிதறண்டு வெற்றிபெறும் மற்றைய வேல்களை வென்று நின்றநிலை மாறாது நிற்பதால் வெற்றிபெற்றும் மிகமிக மிளிர்கின்றதன்றோ? ஆதலின் அறவழியே அன்பினை வளர்த்து அரசாண்ட அம்மன்னன் உலகுக்கு ஒரு உயிர் என்னும் தன்மையான். அவனது குடையின் நிழலில் தங்கும் உலகைக் கண்டவர்கள் இவ்வனைத்துக்கும் ஒன்றே உயிர் என்று சொல்லும்படி அரசாண்ட தன்மை விளங்குகின்றது. உலகு பலதிறப்பட்டாலும் அவை முரண்பட்டு நில்லாமல் இசைப்பாட்டின் இன்பம் போல் ஒற்றித்து நின்று செழிக்கின்றன. உலகை அவன் ஒற்றுமைபடுத்திய தன்மையைப் புகழ்கின்றபடி ஈது. இனி, உலகுக்கு இவனே உயிர் எனவும் தோன்றுகிறான் என்பதனையும் தோலாமொழித் தேவர் சுட்டுகின்றார். உயிர் உயிராவது உடலொடு வழங்கி வருதலாலே யன்றோ? அந்நிலையில் உயிர்க்கும் உயிர்த்தன்மை தந்து உதவுவது யாது என்னுமது ஒரு பழையகேள்வி. உணவில்லையானால் உடலிலே உயிரும் இருப்பதில்லை என்னலாம்; ஆதலின் உணவே உயிர்க்கும் உயிர்த்தன்மையைத் தருகின்றதெனக் கொண்டு நெல்லே உயிர் என்றனர் சிலர்; உணவு இல்லையானாலும் சில நாள் பிழைக்கலாம்; நீரில்லையானால் உயிரேயில்லையாதலின் நீரே உயிர் என்றனர் மற்றும் சிலர் இவர்களை மறுத்து

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

என மோசிகீரனார் பாடுகின்றார். மன்னனில்லையானால், சிறுமீனைப் பெருமீன் விழுங்குவதே போல மெலியாரை வலியார் வாட்டி, வல்லான் வெட்டியதே வாய்க்காலாக, மக்கள் நிலைகலங்கி மாள்வர். அவனுளனாக, உயிர் உயிராகும், நெல் நெல்லாகும், நீர் நீராகும். இத்தகைய சுமை தன்தலைமேல் இருப்பதனை யுணர்ந்து ஒழுகவேண்டிய பெருமையைப் பாராட்டியன்றோ மோசிகீரனார் "அதனை அறிதல் அவனுக்குக் கடன்" என்கிறார். எனவே இவனுக்கென அவையில்லை: அவற்றிற்கெனவே இவனிருக்கின்றான்என வற்புறுத்துவது அவருடைய கருத்தாதல்தெளிக. உரிமை எனக் கூறாமல் கடமை எனக் கூறுவதும் காண்க. "மன்னுயிரெல்லாம் மண்ணாள்வேந்தன் தன்னுயிர்" என்பதே இதன் பொருள் என்க. இவ்வாறு அன்றி, மன்னனையுயிராக்கி உலகை உடலாக்கி வைத்துளார் எனினும் இழுக்காது. உவமை யனைத்தும் சிறிதொத்துச் சிறிதொவ்வாமையே சுட்டுகின்றனஎன, உணர்தல்வேண்டும். முத்தன்ன நகையார் என்றவுடன் பல்லும் திரட்சியுடையவோ என்று கேட்பார் இல்லையே. தயரதனைக் கம்பர் உலகில்வாழ் உயிர்கட்கோர் உடம்பாக்கிக் காட்டுகின்றார் நம்மெதிரே. அதுகொண்டு, உயிர் சென்றவழிஎல்லாம் உடலும்செல்லுமாதலின், உயிர்கள் தீவழிச்சென்றபோது தயரதனும்உடன்சென்று உதவினான் என்பதே கம்பரது கொள்கை என்று கூறவொண்ணாதன்றோ? அவ்வாறு நெடுக உடன்கொண்டுசென்றக்கால் உவமை என்பதற்கே பொருளில்லையாம். இதனைத் தடுத்திடவே, "உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால் உயிரெலாம் முறைவதோர்,உடம்புமாயினான்" எனப் பொதுத்தன்மையை அவ்வுவமைக்குக் கருவியாக விரித்து வைத்துளார். ஆதலின் அஃதேபோல இங்கும் உலகை உடலாக்கி அரசனை உயிராக்கிய நம் தோலாமொழித்தேவருக்கு 'உயிரின் பொருட்டே உடலிருப்ப தென்பதே' கருத்து என்று வலிந்து பொருள் கொள்ளவேண்டா. உயிரில்லையானால் உடலை நரியும் கழுகுமே பிய்த்துத் தின்னும்; அதனை அழியாது காப்பதும் உயிரேயாம், தீமை வாராதபடி காப்பதும் அஃதேயாம்; கல்லினும் நெல் இனியதென்ன உணவுப்பொருள்களைக் [illegible]டி அவற்றைப் பெறும் வழியையு[illegible]ப் பிடர்பிடித்து உந்துவதும் உயிரேயாம்; ஐம்புல இன்பத்தை அவாவற்று உயர் நிலையில் "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்று கொண்டு துய்க்கச் செய்வதும் உயிரேயாம். அறிவுவடிவாகிய உயிரே உடலை நல்வழிப்படுத்துதலின் மக்கட்குக் கண்ணாகி நின்ற அரசனை உயிர் என்றனர் பண்டைத் தண்டமிழ்ப் பெரியோர். இத்தோலாமொழித்தேவரைப் பலவிடத்தும் பின்பற்றிச் செல்லும் சேக்கிழார், உலகிற்கு ஓர் சிறந்த அரசனைப் படைத்துத்தர முந்தியநிலையில் இப்பாட்டின் உட்பொருளையே.

பன்முறை யுயிர்கள் எல்லாம்
பாலித்து ஞாலங் காப்[illegible]

தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம்
நெறிகளிற் சரித்து வாழும்
மன்னரை யின்றி வைகும்
மண்ணுல கெண்ணுங் காலை
இன்னுயி ரின்றி வாழும்
யாக்கையை யொக்கும் என்பார்.

என விரித் துரைக்கின்றார்.

சரித்துவாழும் என்பதற்கு ஒழுகச் செய்தலாலே வாழுமவர்கள் என்றும் ஒழுகச்செய்த லிலையாகுல் நடைப்பிண மாவார் என்றும் பொருள் தோன்றுவதைக்காண்க. ஒருவர்கழுத்தைஒருவர்முரித்துத்தாம் வாழவேண்டும் என நிற்கும் கயவர்களாம் முட்களும் நிறைந்த அழகிய பசும்புற்றரைப் பரப்பாம் இவ்வுலகின்கண்முள்ளைக்களையும் ஓரரசோகுடியரசோ வேண்டா என்பது மண்ணுலகில் எக்காலும்இயலாததாகப் பொன்னுலகில் ஒருவேளை அரசனே இன்றியே வாழினும்வாழலாம் என்னும் கருத்தொடு மண்ணுலகெனவற்புறுத்தும்சேக்கிழார்உள்ளத்தைஇவ்வாறு உள்ளவாறு காண்க. அமைச்சராய் இருந்து கண்ட கனவன்றோ இது. வழிகாட்டிகளாகக்கூடிய அறவோரே அரசராதல் வேண்டுமென்றன்றோ ப்ளேடோவும்முன் ஓர் கனக்கண்டான். அத்தகைய தமக்கென வாழாப் பிறர்க் குரியாளரே உயிர் என நிற்க மற்றையோரெல்லாம் நடைப்பிணமாதலின், அவர்களாலேயே உலகம் வழங்கிவருமானால், அன்னவர்களை உலகுக்கு உயிர் எனக் கூறத் தட்டில்லையன்றோ? உயிரானது தீய வழியிலும் உடலைக்கொண்டு வீழ்த்தி யழுகச்செய்தலின் அன்னவாறு இவ்வரசனும் செய்வான் என்பதையும் இவ்வுவமை சுட்டவில்லையோ எனின் "நிழலுலகு" என்று உலகை நிழலில் வைத்து அரசனை உலகப் பெருஞ் சுமையொடும் கடமையெனும் வெயிலில் வைத்த நம்தோலாமொழித்தேவர்க்கு அது கருத்தன்று. அறவழியே ஓங்குகின்ற அன்பை நிழலாகக்கூறியபின் மறத்திற்கும் துன்பத்திற்கும் தன்னலத்திற்கும் இடமேது. இது பற்றியன்றே வெண்குடை நீழல் எனும் அடை கொடுக்கின்றார்.

உலகுக்கு உயிர் என மன்னவனைக் கூறும் இக்கருத்து மற்றோர் நுட்பத்தையும் உட்கொண்டு நிகழ்கின்றது. "உலகம்" என்பதற்குக் காணப்பட்ட உயிர் என்றும் அஃதாவது உடலோடியங்கும் உயிர் என்றும் பரிமேலழகியார் கூறும் அழகியபொருளைமறக்க இயலாதே. உடலோடு கூடிய உயிருக்குஒருயிராய்இருப்பதென்றால், உயிர்க்குயிராய்இருத்தலன்றோ? கடவுளே இவ்வாறு உள்ளார் என்பர் பெரியோர். உடன் நின்றே அனைத்தையும்உணர்ந்து அவ்வவற்றிற்கேற்ற நற்பயனையும் தீப்பயனையும் தந்து, உயிர்வாழ வைத்து, வேண்டும் பொறி பொருள் முதலியவற்றையும் ஈவதுடன் அவர்கள்மீது அருளோடும் விளங்குகிறார். அம்மட்டோ; அவ்வுயிர்களை அடிமையாக்காமல் அவ்வவர் தத்தம் மனப்படி செல்லக்கூடிய உரிமையையும் தந்து அவ்வுரிமையைப் பயன்படுத்த அறிவு வளர்ச்சிக் கிடமமைத்து முள்ளாரன்றோ? இப்படியெல்லாம் உயிர்களுக்கு,உடன்நின்று உதவி, உரிமையும்தந்து அருளொடு வாழ்பவனே அரசன் என்பது தோன்றவே உலகுக்கு உயிர் என்கின்றாராதல் வேண்டும். இதுபற்றியன்றோ நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன் என்னும்" எனப் பாடுகின்றார். இச் சொற்றொடரைப் பன்முறையும் எடுத்தோதியோதி இப்பொருள்களனைத்தையும் ஒற்றித்து இயைத்துக்கொள்க. இக்கருத்திற்குக் கம்பர் கூற்று முரணுமை காண்க. இப் பண்டைமுறையை மாற்றிச் சொல்வதால் ஒரு வியப்புத் தோன்றுதல் நோக்கி அவ்வொருகொள்கை மனத்தே பதியுமாறு கூறுகின்றார் கம்பர் என்பதை யுணர்தல் நலம். அதுபற்றியன்றேபொதுத்தன்மையைஜபத்தேவையாமல் விரித்தும் கூறினர் அப்புலவர்பெருமான்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[135-வது பக்கத் தொடர்ச்சி]

### 5 கந்தன் வருவும் அந்தகாரக் கழிவும்

இதன்றியும் நடந்த வீரமகேந்திரப் போரில், எதிர்த்து வாராதஇராட்சதர்களுக்குக்குமாரக்கடவுள்சேனைகளால் யாதொரு துன்பமும் நேரவில்லை.ஒடியொளித்தவர்களையும் ஒன்றுஞ் செய்யவில்லை. ஆதலால் சூரபன்மன் அழிந்தபிறகும், இராட்சதர் கூட்டம் ஆங்காங்கு நாவலந்தீவிலும், கடல்கொண்ட தமிழ் நாட்டிலும் பரவியிருந்தது. நமது தேசத்தில் குறிஞ்சி நிலத்தில் இக்காலத்தில் வசிக்கும் குறவர்களும், அவ்வரக்கர்தம் பரம்பரையேயாவர்.இவர்களைச் சீர்திருத்த வெண்ணிய திருக்கருணையால் முருகக் கடவுள் நாவலந்தீவுக்கு எழுந்தருளிய காலம்முதல் குறிஞ்சி நிலத்தின்வழிபடுகடவுளாய் நின்றனர்.அசுரருக்குந் தேவர்களுக்கு மிடையே யிருந்த பகை சூரன்காலத்திற்குப் பின்னர் மாறுவதற்கே அசுரர்குலத்தில் ஒரு பெண்ணும், * தேவகுலத்தில் ஒரு பெண்ணுமாய் முருகக் கடவுள் திருமணம் புணர்ந்தார் என்று கருதவேண்டும். அசுரர் என்பதும் குறிஞ்சி நில வேடக்குறவர் என்பதும்ஒன்றென்பதற்குப்பின்வரும்கந்தபுராணச் செய்யுளே ஆதாரமாகும்:—

பகரு கின்றவப் பாற்படு மெல்லையிற்
குறவர் போற்றிடும் தாரகற் காகவே
மகிழ்வி னோடு மாயா புரமெனு
நகர மொன்றை யணிபெற நல்கினன்

—கந்தபுராணம், அசுரகாண்டம், நகர்செய் படலம் 27.

மறவர்களான குறிஞ்சிவாசிகளே அக்காலத்து அரக்கர் என்பதற்கு ஐயுறவில்லை. இவர்களைச் சீர்திருத்தவே முருகவேள் குறமகளைமணந்து குறிஞ்சித்தெய்வமாயினர்.சிவபெருமான்,மிகவும் இழிந்தசீவர்களான பேய் பிசாசுகளுடன் சுடுகாட்டில் வசிப்பதும் அவர்களுடன் இரவில் எரியாடுவதும் எத்துணைக் கருணைச்

* வள்ளி முலைதோய் குமரன் தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில் தென்பாற் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே.
சம்பந்தர் - திருவரிசிற்கரைப் புத்தூர்-பண்-காந்தாரம்-6.



செயலோ, அத்துணைக் கருணைச்செயலே முருகக்கடவுள் குறிஞ்சி நிலத்தில் வதிந்து குறமகளைமணந்ததும் ஆகும். ஆத்மஞானிகளான மேலோருக்குத் தரிசனங் கொடுத்து அருள்புரிவது அத்துணை விசேடமன்று. "பள்ளத்தாழுறு புனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகும்" பக்தரைச் சற்றே கவனியாமல்விட்டு,தன்னைக்கனவிலும்நினையாத பாவசீவர்களை மேலெழுப்ப முயல்வதே, கருணையே உருவாகியகடவுளின் இயற்கையாம். இதையுன்னிச் சமயகுரவர் மூவரும்,சரவணபவனைக் கூறுமிடங்களில் "தெய்வயானை மணாளன்," "இந்திரன் மருகன்" முதலியன செப்பாமல் "வள்ளிமுலை தோய் குமரன்†", "குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள்‡", 'வள்ளி மணாளன்" "குறவனார் தம்மகனார் மணவாட்டி" என்ன மொழிந்திருப்பதை நமது திருமுறைகளிற் காணலாம். இதனால் வள்ளியம்மையை மணந்ததே முருகவேளுக்குச் சிறப்பான செய்கையாகும். அவ்வாறு சம்பந்தம் செய்தது பனிநிறைந்த அந்தகாரத் திடையே ஆதித்தன் புகுந்ததை யொக்கும். மாயை யென்பதற்கு உருவகமாய்ப் புகலிவேந்தர் காட்டும் சமணசாக்கியர்களைப் பற்றிக் கூறும் 10-ம்செய்யுளொன்றில்

அருகரொடு புத்தவ ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிடம் மலரார்
கருதகுழல் மடவார் கடிகுறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே

—திருமுது குன்றம் - பண் - நட்டபாடை - 10

என முருகவேளின் பெருமையைக் குறிஞ்சிநிலமாகிய திருமுது குன்றத்தில் பாடுவதைக் காணலாம். குறவர் மருமகனைச் சென்றோன் தாதையும் மறவனைப் பன்றிக்குப் பின் சென்றான் இது என்னமாயமென்பர் நம்பியாரூரர்.

பாவ வழியில் நின்ற பசுக்களின் அந்தகாரத்தைப் போக்கி அவர்களைச் சன்மார்க்க நெறிகளில் செலுத்துவதே இத் தந்தைக்கும் மைந்தனுக்கும் தொன்றுதொட்டுச் சிறந்த தொழிலாய் நிற்கின்றது.அஞ்ஞானமாகிய அந்தகாரத்தை நீக்குவதே அறுமுகக் கடவுளின் முதல் தொழிலாகும். பின்வரும் அப்பர் பாசுரத்தில், சேந்தனைச் சிவபெருமான் மகனைக் கொண்டதும், கல்வியால்நிறைந்த கச்சிமயானத்தில் எல்லியை விளங்கநின்றதும்சம்பந்தமற்ற சொற்றொடர்கள் அல்லவென்பது விளங்கும்:—

செல்வியைப் பாகங் கொண்டார்
சேந்தனை மகனைக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லியை விளங்க நின்றா
ரிலங்குமேற் றளிய னாரே

—திருக்காஞ்சி மேற்றளி - திருநேரிசை - 8.

ஞானமார்க்கத்தில் ஒழுகுவதற்கு இன்றியமையாததும் யாவருக்குமெளிதில்கைகூடத் தக்கதும் ஆகிய தமிழ்க்கல்வியை இவ்வுலகத்தில் விருத்திசெய்யும் நிமித்தம் முருகவேள் சூரபன்மனை யொழித்த பின்னர், தமிழ்த் தலைச்சங்கப் புலவராய்த் தன் தந்தையுடன் விளங்கினார். அக்காலச் சங்கக்கல்வி எல்லாக் கலைத்துறைகளினுஞ் சென்றது. நீர்வளமற்றதாகிய பழந்தமிழ் நாட்டைவிட்டு நாவலந்தீவில் நம் முன்னோரைக் குடியேற்றும் நிமித்தம் திருச்செந்தூரில் கோயில்கொண் டருளினார். இவர் பரிவையும்கருணைவெள்ளத்தையும்,முறையே இவர் தாய்க்குஏற்றியும்அவளை யுடையானுக்கு ஆக்கியும், இவர் தந்தை வீற்றிருக்கும் திருவதிகையி லோடும் கெடிலவெள்ளத்திற்கு ஒப்பிட்டும் காட்டலாம்.அவ்வாறு வெளிப்படையில் காட்டாது,

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும்பரிவு
முடையானை யதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தருழ் புனன்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக்குலா
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி [வி
மறிகடலை யிடங்கொள்வான் மலையார வாரி
ஏந்துநீ ரெறிகெடில வடவீரட் டானத் [னே.
துறைவானை யிறைபோது மிகழ்வான்போ லியா

[சுந்தரர்-திருவதிகை வீரட்டானம். பண்-கொல்லி கௌவாணம் 5.

என்று பாடினார். முருகக்கடவுள் தமிழ் நாட்டிற்கு எழுந்தருளியது முதலில் நாவலந்தீவுக்கு யாவருக்கும் வரத் தடைசெய்த கிரௌஞ்ச கிரியை அழித்துச்செய்த வழியால் ஆகும். அவ்வழியே ஆரியர் நூல்களும்,கலைகளும் அவர்நாகரிகமும் வடதிசையினின்று தென் றிசை வரலாயின. சூரனையழித்து இத்தீவில் அறுமுகக் கடவுள் திருக்கோயில் கொண்டதும், பழைய தமிழ்நாடான கபாடதேசம் முதலிய நீர்வளமற்ற தென்கண்டத்தை விட்டுத் தமிழராயினோர் தென்னிந்தியாவின் கீழ்க்கரையிலும் மேற்கரையிலும் தங்கள் வங்கங்களை விருத்திசெய்து கச்சவடங்களை நிலைநிறுத்திப் பின்னர், கடலிற் பாயும் பெருநதிகளைப் பிடித்துக்கொண்டு நாவலந்தீவு முற்றும் குடியேறினர். முருகக் கடவுளே தமிழ்ப் புலவரில் முதலானரென்னின், தமிழின் மாட்சியைக் கூறவேண்டுமோ! இம்மைக்கு வேண்டும் கல்வியும் மறுமைக்குத் தேடவேண்டிய கல்வியும் ஒருங்குசேர்ந்து வளர்ந்தன.ஆதலால் முருகக்கடவுள் தமிழ்நாட்டுக்கு வந்தது எவ்வகையிலும் அந்தக்காரக் கழிவுக்கே என்பது விளங்கும்.

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தருங் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே.

[திருத்தென்குடித்திட்டை, பண்-கொல்லி. (சம்பந்தர்.)

† குறவிதோள் மணந்த செல்வக்
குமரவேள் தாதை யென்று
நறவிள நறுமென் கூந்தல்
நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப்
பெருவேளூர் மேவி னானை
உறவினால் வல்ல னாகி
யுணருமா றுணர்த்து வேனே.

அப்பர் - திருப்பெருவேளூர் - திருநேரிசை 3.

‡ குறவனார்தம் மகடம் மகனார்
மணவாட்டி கொல்லை
மறவனா ராயங்கோர் பன்றிப்பின்
போவது மாயங் கண்டீர்
இறைவனா ராதியார் சோதியா
ராயங்கோர் சோர்வு படா
அறவனா ராவ தறிந்தோ
மேல்நாமிவர்க் காட்ப டோமே

—மூப்பதுமில்லை - பண் - நட்டராகம் - 6.

# மதுரைக் கோவை

[141-வது பக்கத் தொடர்ச்சி]

மூதறிவுடைமை கூறல்

தன்சிற்றில் வாசலு மூசலு மாகத்
தவிக்குமிந்த
நெஞ்சிற் கிடக்கு நினைவறி வாளை
நினையுமெழுத்
தஞ்சிற் றெளிபர ஞாலவாயி
ளைவறநீ
வஞ்சித் தனையணங் கேயறி யாளென்ற
வாசகமே. 137.

என்னை மறைப்பி னெண்ணிய தரிதென நகுதல்

ஆர்க்குந் தரள வயல்மது ராபுரிச்
சொக்கர்வெற்ப
[1]ரேற்குங் கலவி யெனைமறைத் தார்சங்
கெடுத்ததறி
யார்க்கும் படுதிரை முத்தறி வார்தர
மாய்ந்தறிந்து
சேர்க்கும் பொழுதினை லாவிணங்க ாது
தெரியலுக்கே. 138.

நகையாற்றுமை கூறல்

மறையால் வடித்த தமிழ்மைந்த னேடெதிர்
வையையந்தண்
டுறையாளர் சொக்கர் வரையணங் கேயுன்
றுணைவிமைக்கட்
கறையாடல் வேலின் கடையா லெறிந்து
கவர்ந்துகொண்ட
குறையா வியுமுன் குறுநகைக் கேகொள்ளை
கொண்டனையே. 139.

அஞ்சி யச்சுறுத்தல்

காலம்பொல் லாதினிக் கங்குல்பொல் லாதுவிற்
கானவர்நந்
சீலம்பொல் லாதையர் செய்கைபொல் லாது
திரிபுரத்தை
மாலம்பொல் லாதெரிப் பார்சொக்க நாதர்
மதுரையிலிக்
கோலம்பொல் லாதண்ண லேகுறு காகொளெங்
கோப்புனமே. 140.

தலைவி[யை] நோந்து கூறல்

காலங் தெரிந்து மிளங்கா விடைசென்று
கண்டுமிவர்
சீலந் தெரிந்தும் பயனென் கொலோதிரை
சிந்துவையை
கூலம் படச்சுமப் பார்சொக்க நாயகர்
கூடலிலென்
போலந் தரம்படு வாருள ரோமயல்
பூண்டவரே. 141.

மடற்றிறம் நினைதல்

சேதித்த போந்தை மடல்மாவை மேல்கொண்டு
சென்றவரூர்
வீதித் தலைபுக்கு பீட்கைகன் றேகொள்ளை
வேரிவண்டு
கோதிக் கமழ்கொன்றை யார்சொக்க நாயகர்
கூடல்வஞ்ச
நீதிக் கயல்விழி யார்கவர்ந் தேகிய
நெஞ்சினையே. 142.

மடலேற்றை யுலகின்மேல் வைத் துரைத்தல்

தொடியுங் குழையும் பணியணி வார்தமிழ்ச்
சொக்கர்புயம்
படியும் படியி லிளைஞரெல் லாமெம்
பரனணியும்
பொடியுந் திருத்தொங்க லுஞ்சங்க மேனிப்
புதுநிறத்தோன்
கொடியுங் கிடைத்தல்ல வோபிழைத் தார்மயல்
கொண்டபின்பே. 143.

தலைவன் மடலேறுவே னென்றல்

செய்ப்பட்ட காவித் திருவால வாயர்
சிலம்பில்வெறும்
பொய்ப்பட்ட நுண்ணிடைப் பூந்திரு வேயொரு
பூங்கிளிபோர்
மைப்பட்ட கோல மதர்விழி யார்தம்
வடிவொடுமென்
கைபட்ட போதவர் கற்பென தாமென்று
காண்குவனே. 144.

தன்னேடு மவளோடுஞ் சாற்றி வெளிப்படக்கூறல்

வன்னத் தருமவு லிச்சொக்க நாதர்
மதுரைசுற்றும்
புன்னைப் பொதும்பர் விரகறி யாது
புகுந்தழியு
மென்னைக் கிழியி லெழுதாதென் பேரு
மெழுதிமற்றன்
மின்னைத் தனியெழு திப்புகு வேனுங்கள்
வீதியிலே. 145.

தோழி எழுதவரிதென்றல்

விண்ணிற் றிரிநதி வீற்றுளும் வேணியர்
வெள்ளிமன்றி
லுண்ணிற் பவர்பொற் கயிலைவெற் பாசுரு
ளோதிமொழிப்
பண்ணிற் சுவையு மெழுதி முத்தோலையைப்
பாயுமிரு
கண்ணிற் களவு மெழுதுவை யாகிலுன்
கல்வி நன்றே. 146.

எழுத வேழுகென்றல்

சினத்தா ரிதழித் திருவால வாயர்
சிலம்பில்வண்டு
கனைத்தா தரிக்குங் கனங்குழ லாயின்றன்
கன்னிகள்ள
வினைத்தார வேல்விழி யாலென்னை யாளும்
விரகொருகால்
நினைத்தா லெழுத வரியதெ[ா]ன் றோவிந்த
நெஞ்சினுக்கே. 147.

(பிரதி) 1. ரேற்றுங்.



அருட்குணங் கூறி மறுத்தல்

எழுதா மறையை யெழுதவென் றூனு
மிடங்கொடுத்து
முழுதானு மொன்றை முனியும தோகிணை
முக்கலகை
தொழுதாடு மூவிலை வேற்சொக்கர் மால்வரைத்
[2]தோன்றலென்னைப்
பழுதாக வெண்ணினை யோயிது வோவுன்
பயனறிவே. 148.

(பிரதி.) 2. தோன்றலென்னைப்.

தோழிமடல் விலக்கல்

மானின்ற செங்கை மதுரேசர் சுந்தர
மாறர்வெற்பிற்
கானின்ற கூந்தற் கயல்விழி யாளிதங்
கண்டிங்ஙனே
நீ நின்ற சோகமு முன்னு தரவு
நிலையுஞ்சொல்லி
யானின்று வந்தல்ல வோநண்ப னேமட
லேறுவதே. 149.

மடற்பகுதி முற்றும்

# ஸ்ரீ தியாகராஜ கீர்த்தன மணிமாலை.

## II. திருப்பதி ஸ்ரீநிவாஸமூர்த்தி ஸ்தோத்திரங்கள்.

[140-வது பக்கத் தொடர்ச்சி]

3. இராகம்—கல்யாணி] [தாளம்—ரூபகம்.

பல்லவி

தரமா நீ மஹிம பொகட தாரகாதிபாநந ........................................................(தரமா)

அநுபல்லவி

ஸுரநாத ஸரோஜாஸந வர லம்போதராதி - ஸுரஸேவித ஸ்ரீநிவாஸ திருப்பதீச ஸர்வேசா...(தரமா)

சரணம்

சேஷகிரி ஸதந ஸ்ரீபதி நீவேகாதா நாக - பூஷணுடு நீமித்ருடுகாதா நாத
தோஷரஹித மனஸுந பக்திலேநிவாரைந-வேஷதாருலகு த்யாகராஜவிநுத ஸர்வேசா...(தரமா)

பொருள்

தாரகாதிபாநந - சந்திரனையொத்த திருமுகமண்டலத்தையுடையவனே, நீ மஹிமபொகட - உனது மகிமையை யெடுத்துக் கூற, தரமா - சாத்தியமாகுமா?

ஸுரநாத - தேவேந்திரன், ஸரோஜஆஸன - பிரமதேவன், வர லம்போதர - சிறப்புடைய கணபதி, ஆதி ஸுர ஸேவித - முதலிய தேவதைகளால் வணங்கப்பட்டவனே! ஸ்ரீநிவாஸ - ஸ்ரீநிவாஸப் பெருமானே! திருப்பதீச - திருப்பதியிற் கோயில்கொண்டிருக்கும் எம்பெருமானே! ஸர்வேசா - எப்பொருளுக்கும் காரணமான இறைவனே! (நீ மஹிம பொகட தரமா - உனது மகிமையை யெடுத்துக்கூறச் சாத்தியமாகுமா?)

சேஷகிரி ஸதன - சேஷகிரியை யிருப்பிடமாகக் கொண்டவனே! ஸ்ரீபதி நீவே காதா (புருஷகார பூதையான) லக்ஷ்மிப் பிராட்டிக்கு நீயே பதியல்லவா? நாகபூஷணுடு- சர்ப்பாபரணன சிவபெருமான், நீமித்ருடு காதா-உனது மித்திரனல்லவா? நாத - நாதனே, தோஷரஹித-நிர்மல ஸ்வரூபனே! த்யாகராஜ விநுத - தியாகராஜனால் கொண்டாடப்பட்டவனே! ஸர்வேசா-ஸர்வேச்வரனே! மனஸுந- உள்ளத்தில், பக்தி லேநிவாரைந - பக்தி யில்லாதவர்களான, வேஷதாருலகு - வேஷதாரிகளுக்கு (நீ மஹிம பொகடதரமா-உன் மகிமையை யெடுத்துக்கூறச் சாத்தியமாகுமா ?)

கல்யாணி ராக லக்ஷணம்.

இந்த ராகம் 72 மேளகர்த்தா முறையின்படி 65-வது கர்த்தா ராகமாகும். இதற்கு அம்முறையில் கடபயாதி ஸங்க்யைக்கு ஒத்துவரும்படி மேசகல்யாணி என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதில்எல்லா ஸ்வரங்களும் கமகஒரிகைகளோடு விசேஷ ரஞ்சகம் அளிக்கத்தக்கவை. ஆயினும் சதுச்ருதி ரிஷப, அந்தர காந்தார, காகலீ நிஷாதங்கள் மிகவும் சிறப்பான இராகச்சாயாஸ்வரங்களாம். இது பிரதி மத்தியமமான இராகங்களில் ஒன்றாயினும், பிரதி மத்தியமத்தின் உதவி சிறிதுமின்றியே இன்பம் தரத்தக்க வேறு பல பிரயோகங்களும் உண்டு. உதாரணமாய் நிரிகரிநி - தகரிநித - தநிரிநித -கரிநிதநிகரிஸ-நிரிஸ்நித-கநிதகப-ஸரிக-ஸாரி-நிரிநிதநித-கதத-கபப-கரிகாகாமுதலிய, பிரயோகங்களைப் பார்க்கவும்: மதம-கமநித-பமகமதா-கநிதகபமபா முதலிய பிரயோகங்கள் மட்டுமே மத்தியமரஞ்சகமானவைகள். இவ்விரகசியங்கள் அனுபவத்தாலறியத்தக்கவை.

ஆரோஹணம்:—ஸரிகமபதநிஸ்.
அவரோஹணம்:—ஸ்நிதபமகரிஸ.

### ஸ்வர ஸாஹித்யம்.

ஸம்ஜ்ஞா விவரணம்

, — இது ஒரு களையைக் காட்டுகிறது.
; — இது இரண்டு களைகளைக் காட்டுகிறது.
| — இது தாளத்தின் மத்தியிலுள்ள தட்டுக்களைக் குறிப்பிடுகிறது.
|| — இது தாள ஆவர்த்த முடிவைக் காட்டுகிறது.
* — இது பாட்டுத் தொடங்கு மிடத்தைக் குறிப்பிடுகிறது.

ஸரிகம— பாட்டின் நடை எந்தக்காலத்தில் உள்ளதோ அதன் நடுவில் துரிதகால ஸங்கதி வருமிடங்களில் இவ்வாறு கீழ்க்கோடிடப்[illegible]ருக்கும்.
ஸரிகம— மேற்படி ஸம்ஜ்ஞையிற் கூறப[illegible]ருக்கும் துரிதகாலத்துக்கும் துரிதமான காலத்தை இந்த இரட்டைக் கீழ்க்கோடு குறிக்கும்.
பதநி—தடித்த எழுத்தில் உள்ள ஸ்வரங்கள் கீழ் ஸ்தாயியைக் குறிப்பிடும்.
ஸ்ரீகம்—மேலே புள்ளியுள்ள ஸ்வரங்கள் மேல் ஸ்தாயியைக் குறிப்பிடும்.

[இக்கீர்த்தனம் மத்யம காலத்திற் பாடப்படவேண்டும்]

**பல்லவி**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மா பா | தா நீ ஸ்ா; | ஸ் நி தா | பா - ப ம கா ரீ | ஸா ஸா | நீ ஸா ரீ ஸா | ரீ; | ;; - க ம ரீ | |
| த ர | மா . நீ ; | ம . ஹி | ம - பொ . கட | தா . | ர கா . தி | பா; | ;; - ந . ந | |
| கமபா | தாநீஸ்ா; | ஸ்நிதா | பா - பமகாரீ | ஸநிதா | தா-நிஸரீஸா | ரீ ; | ;; - கமரீ | |
| த. ர | மா. நீ ; | ம .ஹி | ம - பொ.கட | தா . . | ர - கா . . தி | பா ; | ;; - ந . ந | |
| (தரமா) | | | | | | | | |

**அநுபல்லவி**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஸ்ா ஸ்ா | ஸ்ாநீதாபா | மா பா | தாநீ- ஸ்ாஸ்ா | நீஸ்ா | ரீ; ரீ; | க்ாரீ | ஸ்ாநீதாநீ | |
| ஸா ர | நா . தஸ | ரோ . | ஜா .- ஸந | வர | லம்; போ; | த . | ரா . . தி | |
| ஸ்நிஸ்ரி | ஸ்நிதாபாபா | மாபா | தாநீ -ஸ்ாஸ்ா | நீஸ்ா | ரீ; ரீ; | க்ாரீ | ஸ்ாநீ தாநீ | |
| ஸா. ர. | நா . . தஸ | ரோ . | ஜா. -ஸந | வர | லம்; போ; | த . | ரா . . தி | |
| ஸ்நிஸ்ரி | ஸ்நிதாபாபா | மா பா | தாநீ - ஸ்ாஸ்ா | நீஸ்ா | ரீ ; ரீ ; | க்ாமா | க்ாரீஸ்ாநீ | |
| ஸா. ர. | நா . . தஸ | போ. | ஜா. - ஸந | வர | லம்; போ; | த . | ரா . . தி | |
| ஸ்ாரீ | ஸ்நிதா பாபா | ஸ்நிதா | பா - தாநீஸ்ா | ஸ்ா ரீ | நீ தா பாதா | பா ; | பாமா-கமரீ | |
| ஸார | ஸே . . வித | ஸ்ரீ . . | நி - வா . ஸ | திரு | ப்பதி . ச | ஸர்; | வே . -ச . . | |
| (தரமா) | | | | | | | | |

**சரணம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பா ; | பா - பாமாபா | தாமா | காரீஸாஸா | ஸாரீ | கா; மா; | பா; | ; - தா; தா | |
| சே; | ஷ - கிரிஸ | த ன | ஸ்ரீ . பதி | நீ . | வே; கா; | தா; | ; - நா ; க | |
| ஸ்நிதா | ; பமகாரீ | ஸநிதா | நீஸாரீ ரீ | காமா | பாமாபா; | தாநீ | ஸ்ாநீஸ்ா; | |
| பூ . . | ; ஷ . ணுடு | நீ . . | மி . த்ருடு | கா . | தா . . ; | கா . | . . த ; | |

“தோஷரஹித.........ஸர்வேச”—அனுபல்லவிபோல் பாடவேண்டும்.

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—2. அநுமப் படலம்

[143-வது பக்கத் தொடர்ச்சி]

**ஊச லென்னப் போய்வரு பாசுரம்.**

“நிருப, நேமி பண்டுருட்டிப் பெருமை யெய்தினோர் யாவரே இராமனைப் பெற்றார்” என்னத் தயரதனை வியந்தனன் வசிட்டன் ஒருநாள். அன்ன இராமன்பால் இவ்வரம்பிலாப்பெரும்புகழ் அனுமனன்றி வேறு யாவரே பெற்றார்! அநுமனை ஈன்ற நல்லாள் இதனைக் கேட்பாளாயின் கழிபே ருவகை எத்துணை எய்தியிருப்பாளென்பதை மதித்தலரிது. பேசுவதில் வல்லவனென்றும், திருந்திய நாவுடையவனென்றும், தூதின் திறமை நனி வாய்ந்தவனென்றும் அனுமனைக் கொண்டாடுகின்ற வடநூலைக் காட்டிலும், அவனைச் சான்றோன் எனச் செப்புகின்ற தமிழ்நூலே அஞ்சனை தேவியின் செவிகளுக்குச் சால உவந்ததா யிருக்கும் என்பதில் ஐயமில்லை ஆயினும் அஞ்சனையின் உகப்பிற்கோ கம்பர் இப்பாசுரங்களைப் பாடினார்? இதன்பின் இராமன் அனுமனை நோக்கி,

> எவ்வழி யிருந்தான் சொன்ன
> கவிகுலத் தரசன் யாங்கள்
> அவ்வழி அவனைக் காணு
> மருத்திய லணுக வந்தேம்
> இவ்வழி நின்னை யுற்ற
> வெமக்குநீ யின்சொ லன்ன
> செவ்வழி யுள்ளத் தோனைக்
> காட்டுதி தெரிய வென்றான்.

[நீ சொன்ன, குரங்கு இனத்திற்குத் தலைவனான சுக்கிரீவன், எங்கு இருக்கின்றான்? அவனிருக்கு மிடத்திற்குச் சென்று அவனைக் காணும் விருப்பமுடன் இங்கு நெருங்கி வந்தோம். இவ்விடத்தில் உன்னைச் சந்திக்க நேர்ந்த எமக்கு, இன்சொல் அனைய செம்மையான உள்ளமுடைய அவனை நீ தெரியக் காட்டுவாயாக, என்றான்]

முன்னைய பாசுரங்களில் சூழ்ந்திருக்கும் ஐயத்தினைத் தெளிவிப்பதற்கு இந்தப்பாசுரம் யாதும் வெளிச்சம் வீசாவகை ‘இன்சொல் அன்ன’ என்னுஞ் சொற்கள் அமைந்திருக்கின்றன. ‘செவ்வழிஉள்ளத்தோன்’ என்று இராமன் சுக்கிரீவனை அறிந்தவாறெங்ஙனம்? “எரிகதிர்ப் பரிதிச் செல்வன்” என்பதற்குமேல் சுக்கிரீவனைப்பற்றி அனுமன் இதுகாறும் யாதும் செப்பவில்லை. முதன்முதல் இராமனிடம் சுக்ரீவனைப்பற்றிப் பேசிய கவந்தனும், “கதிரவன் சிறுவனுப கனக வாள் நிறத்தினன்” என்ற அளவே இயம்பியிருக்கக் காண்கின்றோம். சவரி, சுக்ரீவனைப்பற்றி இராமனுக்கு யாதுகூறினாள் என்பது கம்பரது நூலின்கண் காணக் கிடக்கவில்லை. வாலிக்குப் பயந்து ஓடிப்போய்ச் சுக்ரீவன் ஒளிந்திருந்த அத்துளக்கில்குன்றம் நினைவரிதாயற்கொத்த நெறியெலாம் நினைந்து சொன்னாள் என்பதே தெரிகின்றது. மற்று, “தீயவர்ச் சேர்க்கிலாது செவ்வியோர் சேர்த்துச்செய்தல்” நன்றெனத் துவக்கிய கவந்தனது உரையினைக்கொண்டு இச்சுக்கிரீவனை “செவ்வழிஉள்ளத்தான்” என்று இராமன் நினைக்கலாயினான் என எண்ணுவது நெடுந்தூரம் தேடியொரு காரணம் பிடித்தபடியாகும். எனின், “நீஇனியசொல்லால் இயம்பிய வண்ணம் செவ்வழி உள்ளத்தவனா யிருக்கும் அச்சுக்கிரீவனைக் காட்டுதி” என இது பொருள் படவேண்டுமாதலின், இராமனது பெரும்புகழிற்கு இலக்காகவல்ல சில பாசுரங்கள் அனுமன் கூறியன ஒருகால் விட்டுப்போயிருக்கலாம் என்று முன்னர்க் கொண்ட ஐயம் ஒருவாறு வலியுறுகின்றது. செவ்வழியுள்ளத்தான் சுக்கிரீவன் என்பதை உணர்த்திய மொழிகள் அப்பாசுரங்களில் அடங்கியிருந்திருத்தல் கூடும். அவனைத்தஞ்சமேற்கும்படி வேண்டப்போகின்றானாதலின் அச்சுக்கிரீவன் அளியன் என்பதைக் காட்டுவதற்குச் செவ்விய உள்ளத்தோனவானென்று அவனை முன்னர் அனுமன் செப்பிவைத்திருக்கவேண்டுவது முறைமையே. இந்தக் குறிப்பைக்கொண்டு, அனுமன் கூற்றாகிய சில பாசுரங்கள் விடுபட்டுப் போயின என்று கொண்டக்கால், அப்பாசுரங்களில் இராமனது புகழிற் கேற்றபொருள்கள் ஒருகால் பொதிந்திருக்கலாம் எனமதித்து, முன்னையசெய்யுள்களை இடைச்செருகல்கள் என்று விலக்காமற் காக்கலாம். எனினும், ‘இன்சொல் அன்ன செவ்வழி உள்ளத்தோன்” என்றதற்கு, “உன்னுடைய சொற்கள் எவ்வளவு இனிமையாக இருக்கின்றனவோ அவ்வளவு செம்மையாக உன்னால் குறிக்கப்பட்டவனுடைய உள்ளமும் இருத்தல் வேண்டும் ......அன்னவனைக் காட்டுதி” எனவேறுபொருள் காணவும் இயலுமாதலாலும், முன்னே சில பாசுரங்கள் இருந்திருக்கவேண்டுவது இப்பொருளிற்கு இன்றியமையாதது அன்றாதலினாலும், பாசுரங்கள் சில விட்டுப்போயின என்று கருதியது முற்றிய முடிவாம் என்று எண்ணலாகாது. இனி, “இன்சொல் அனன” என அனுமனதுசொற்கள் இப்பாசுரத்திலும் புகழப்பெறுவதால், முன் சென்ற நான்கு பாசுரங்களும் இடைச்செருகல்கள் என்றே எண்ணுவதும் அரிதாகின்றது. மற்று, கம்பர் கவிகள் தாம் இவை என உறுதிகூறத்தகுந்த சொல்நயம் பொருள்நயம் அனைய முத்திரை ஒன்றும் அவைகளில் இல்லவுமில்லை. இதன்றியும், இதற்கு முன்பாசுரத்தில், “பெற்றியர் மூவர்க்கேயும் போராற்ற லரிது மன்னோ” என அமைந்திருக்கும்சுற்றடியின் நான்காம்சீர் தேமாங்காயாக இருக்கக் காணலாம். விள மா மா விள மா மா என்னும் வாய்பாட்டிலமைந்த இவ்விருத்தத்தில் இடையிலே ஒரு காய்ச்சீர் கொணராமல் பாடவல்ல ஆற்றல் கம்பருக்கா இல்லாமற் போயிற்று என்னவும் அயிர்த்தல் வேண்டும். இப்படியே முன்னும் பின்னும் ஐயமும் அமைதியுமாய் ஊசலாடநிற்கும் இப் பாசுரங்களை ஒருதிறமாக மதித்து முடிவுசெய்தல் இயலவில்லை. வான்மீகர் நூலின்கண் இராமனால் அனுமன் புகழப்பெற்றிருப்பதைக் கண்ட யாரோவொருவர், தமிழ்நூலில் அது விடுபட்டுப் போயிற்றே என வருந்தி அக் குறையை நீக்கும் பொருட்டுத் தாமேபாடிச்சேர்த்திருக்கலாமென்றும், அவ்வாறு பாடுங்கால் அப்புகழையும் இங்கு மிகைபடப் பேசிவிட்டாரென்றும் எண்ணுதற்கு இடமிருக்கின்றதாகையால், அப்படிக்கொள்வதும், அனுமன் இத்துணைப் புகழிற்கு இங்கு எவ்வெண்ணம் உரியவனாயினான் என்ற ஐயத்தினின்று எளிதில் தப்புவதற்கு ஏற்றவோர்வழியாய்த்தென்படுகின்றது இதனால், கலையையும் வேதக்கடலையும் கற்றுக்கடந்தவன் அனுமன் என்பதை மறுத்துமொழிய யாரும் புகுந்ததில்லை. அந்தக்காட்சி, இதுகாறும் அனுமன் சொன்ன எச்சொல்லாலும் தோன்றிற்றில்லை என்பதற்கு இயன்ற கருத்துக்களே இங்கு ஆராயப்பெற்றன. இராமனது உரையும் குறுக நிமிர்ந்ததோர் வித்தகப் புகழினோன் இவ்வனுமன் என்பதை ஐயமறக் காட்டும் வார்த்தை இனிச்சில பாசுரங்களுக்குப்பின் பிறக்கப்போகின்றது. அதற்குப் பின்னர் இப் புகழ்ப்பாடல்கள் வந்திருக்குமாயின் யாரும் எக்குறையுங் கண்டிருக்கமாட்டார்.

‘செவ்வழிஉள்ளத்தோனைக்காட்டுதி’ என்றுகேட்ட இராமனை இனிஅனுமன்புகழத் தொடங்குகின்றான்.

> மாதிரப் பொருப்போ டோங்கி
> வரம்பிலா வுலகின் மற்றுப்
> பூதரப் புயத்து வீரர்
> நும்மொக்கும் புனிதர் யாரே
> ஆதரித் தவனைக் காண்டற்
> கணுகினி ரென்னி னன்னான்
> தீதவித் தமையச் செய்த
> செய்தவச் செல்வ நன்றே

[திக்குக்களில் உள்ள மலைகளுக்கு இணையாக வளர்ந்து பூமியைத் தாங்குகின்ற தோள்களையுடைய வீரர்களே, எல்லையற்ற இந்த உலகத்தில், உங்களுக்கு நிகரான தூய்மையுடையவர் யார் இருக்கின்றார். நீங்களே விரும்பி அவனைக் காண வந்தீர்கள் என்றால், அச்சுக்கிரீவன், தீமைகளுக்குக்காரணமாகியஐம்பொறிகளை அடக்கி அமைவுறச்செய்த செவ்விய தவமானது நல்ல பயனைத் தந்தது]

> இரவிதன் புதல்வன் தன்னை
> யிந்திரன் புதல்வ னென்னும்
> பரிவிலன் சீறப் போந்து
> பருவரற் கொருவ னாகி
> அருவியங் குன்றி னின்னோ
> டிருந்தன னவன்பாற் செல்வம்
> வருவதோ ரமைவின் வந்தீர்
> வரையினும் வளர்ந்த தோளீர்

[மலைகளைக் காட்டிலும் பெரியதாக வளர்ந்திருக்கின்ற தோள்களை உடையவர்களே, இந்திரனது புதல்வனாகிய வாலிஎன்னும் இரக்கமில்லாதவன் கோபித்துத் தன்னைத் துரத்த அதனால் சூரியனது புதல்வனாகிய அந்தச் சுக்கிரீவன், தனிப்பெருந் துன்பத்திற்கு ஆளாகி, அருவிகளையுடைய இம்மலையைச்சேர்ந்து என்னுடன் இருக்கின்றான்; அவனுக்குப் பாக்கியம் வந்து சேரும்பொருட்டு இப்பொழுது நீங்கள் வந்தீர்]

என்னச் சுக்கிரீவனது நிலைமையோடு அவன் தன்மையையும் இயம்பிப் பின் தான் வேண்டுவதையும் குறிப்பானாகி,

> ஒடுங்கலி னுலகம் யாவு
> முவந்தன வுதவி வேள்வி
> தொடங்கின மற்று முற்றத்
> தொல்லறந் துணிவ ரன்றே
> கொடுங்குலப் பகைவ னாகிக்
> கொல்லிய வந்த கூற்றை
> நடுங்கினர்க் கபய நல்கு
> மதனினு நல்ல துண்டோ

[விசாலமான பூமிமுதலிய விரும்பிக் கேட்கப்படுகின்ற எல்லாவற்றையும் கேட்பவர்க்குத் தானம்செய்துதொடங்கிய யாகங்களையும் தவம்முதலியவற்றையும்நிறைவேற்றப் பழமையான அறங்களைச் சான்றோர் நிச்சயிப்பார். ஆயினும், குலத்திற்குக் கொடியபகைவன் ஆகிக் கொல்வதற்கு வந்த யமன்போன்ற பகைவனுக்கு அஞ்சிச் சரணமடைந்தவர்களுக்கு அபயம்அளிப்பதைக்காட்டிலும் உயர்ந்ததருமம் உண்டோ]

எனச் சரண்புக நின்ற தம் நிலைமையோடு அபயம் அளிப்பதன் சிறப்பையும் செப்பியபின், வந்திருக்குமவர் காக்கவல்லரே என்பதையும் காட்டுகின்றகொள்கையில்,

எம்மையே காத்தி ரென்ற
லெளிதரோ விமைப்பி லாதோர்
தம்மையே முதலிட் டான்ற
சராசரஞ் சமைந்த வாற்றன்
மும்மையே மூலகங் காக்கு
முதல்வர்நீர் முருகச் செவ்வி
உம்மையே புகல்புங் கேமுக்
கிதின்வரு முறுதி யுண்டோ

[எம்மைக்காப்பீர்என்றுகூறுவது எளியதொன்றன்றே. நீங்கள், இமைக்காத தேவர்களே முன்னிட்டு மிகுதியான சராசரங்கள் நிரம்பிய மும்மை உலகங்களையும் காக்கும் முதல்வர்ஆவீர். தெய்வத்தன்மையுடையசெம்மையைய்ந்த உங்களைத் தஞ்சம்புகுந்த எங்களுக்கு, இதைப்போல் வர வல்ல நன்மை வேறு ஒன்று உண்டோ]

எனச் சாற்றினான். மும்மை யேழ் உலகங் காக்கும் முதல்வர் நீர், என்றது உபசாரமாக உவந்து கூறியது அன்று. தான் உணர்ந்த உண்மையை உணர்ந்தபடியே அனுமன் கூறினானென்னவே கொள்ளல் வேண்டும். வந்திருந்த இராமனைத் திருமாலென்றே அனுமன்நிச்சயமாகத் தெரிந்துகொண்டு, அதனைத் தான் தெரிந்து கொண்டதன்மையையும் எடுத்துரைத்தஉண்மைவாசகங்களாம் இவை. பின்னர், வாலியைக் கொல்லவல்ல ஆற்றல் இவ்வீரர்க்கு உளதோ என்று ஐயுற்ற சுக்கிரீவனைத் தேற்றுதற்கமைந்த இவ்வனுமன், "சங்குசக்கரக் குறியுள தடக்கையில் தாளில்......ஆகையால், இராமன் அத் திருநெடுமாலே" என்று வற்புறுத்திய தன்றியும், தான் பிறந்தநாள்,

என்னை யீன்றவ னிவ்வுலகி யாவையு மீன்றான்
தன்னை யீன்றவற் கடிமைசெய் தவமலீ தையா
உன்னை யீன்றவெற் குறுபத முளதென வுரைத்தா
னின்ன தோன்றலேயவனிதற் கேதுவுண் டிறையோய்

[என்னைப் பெற்ற வாயுபகவான் என்னை நோக்கி, 'நீ உலகம் யாவையும் படைத்த பிரம்மனைப்பெற்ற திருமாலுக்கு அடிமைசெய்; அதுவே சிறந்த தவம் ஆகும்; பின்னாய், நீ அவ்வாறு செய்தால், உன்னைப்பெற்ற எனக்கும் சிறந்த பதவி கிடைக்கும்' என்று கூறியிருந்தான். இந்த இராமனே அத்திருமாலாவான்.என்தலைவா,இதற்குவேறு ஒரு காரணமும் உளது—]

துன்புதோன்றியபொழுதுடன்றோன்றவனெவர்க்கு
முன்புதோன்றலேயறிதற்குமுடிவென்னென்றியம்ப
அன்பு சான்றென வுரைத்த னையவென் யாக்கை
என்பு தோன்றல வுருகின தெனிற்பிறி தெவனோ

[அக்காலத்தில் அப்புருஷோத்தமனைத்தெரிந்துகொள்வதற்கு நிச்சயமான அறிகுறிஎன்ன'என்று நான் என்தந்தையைக்கேட்க, அவ்வாயுபகவான், 'யாருக்கும்துன்பமுண்டானகாலத்தில் உடனே வந்துதோன்றுவான் அவன். அதுவன்றியும், அவனைக்கண்டளவில் உன் இதயத்தில் அன்பு உண்டாவதே சாக்ஷியாகும்'', என்று சொன்னான். தலைவனே, அப்படியே இவனைக் கண்டவுடன் என்உடல், எலும்பும் தோன்றாதபடி உருகிவிட்டது. என்றால், இவன் அத் திருமாலன்றி வேறு யாராக இருத்தல் கூடும்?]

எனின்,எதிர்நின்ற இவ்விராமன் அத்திருநெடுமாலே என்பதில் அனுமனுக்கிப்பொழுது யாதும் ஐயமில்லை. ஆதலின் சுக்கிரீவனிடத்தில் இப்பொழுது இவன் சென்று என்னசொல்வதென்று யாதும் ஆராயவும் வேண்டா. 'நெடுமாலைக் கண்டேன், அவர் நின்னை அளிக்க வருகின்றார்' என்று அறைவதொன்றே முறை. அவ்வாறிருக்க, இதன் மேல்,

யாரென விளம்பு கேறு
னெங்குலத் தலைவற் கும்மை
வீரநீர் பணித்தி ரென்றான்
மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழ லிளைய மைந்த
மற்றநம் மரபி யாவும்
சோர்விலா துரையென் றையன்
சொல்லனுஞ் சொல்ல லுற்றான்

[மெய்ம்மைக்கு வேலிபோல்பவனாகிய அனுமான், "வீரனே, எம் குலத்திற்குத் தலைவனாகிய சுக்கிரீவனிடத்தில், உங்களை யார் என்று நான் விளம்பலாம் என்பதை நீங்களே கட்டளையிடுங்கள்'' என்று கேட்டான். அப்பொழுது இராமன், "நீண்ட வீரக்கழலை யணிந்த தம்பி லக்ஷ்மணா, நம் மரபுஎல்லாவற்றையும் தளராமல் இவனுக்குச்சொல்'' என்று சொல்ல, இலக்குவனும் சொல்லலானான்]

இலக்குவன் சொல்லத்தொடங்குமுன், அனுமன் கேட்ட கேள்வியைச் சற்று ஆராய்தல் சாலப் பயன் தரும்.

# செல்வமில்லாக் குறை

கூலக்குடி குப்புசாமி ஐயர் ஒரு காலத்தில் பணக்காரராயிருந்தவர். இவர் சிலகாலம் அனுபவித்த அந்தச் செல்வம் அவர்தந்தை தேடிவைத்தது. அது போதும் என்று இருந்திருப்பாரானால் குப்புசாமி ஐயருக்குக் குறையொன்றும் வந்திருக்காது. மனிதர்தாம் அப்படியிருப்பதில்லையே அப்படி இருந்துவிட்டால் இந்தப் பரதசைப் பணம் ஆள்மாறித் திரிவது எப்படி முடியும்! குப்புசாமி ஐயரும் ஒரு மனிதர், அவர் கையில் இருந்ததும் அந்தப் பணம். ஆகையால்,வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்.

இதன்மேல் கூலக்குடி குப்புசாமி ஐயர் சரித்திரம் மிகவும் சுருக்கமானது. இதுவரையில் தன் வாழ்க்கையைக் கூடியமட்டும் சுலபமாக நடத்திக்கொண்டு வந்த கூலக்குடி குப்புசாமி ஐயரை இனி அவர் செய்த வியாபாரம் தன் இஷ்டப்படி நடத்தத் தலைப்பட்டது. புதுப்பணம் 'வந்தேன் வந்தேன்' என்கிற குரல் மாத்திரம் இவருக்குத் தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்ததே யொழிய, இருந்த பணம் போவது தெரியாமல் போய்க்கொண்டே இருந்தசெய்தியையும் மெல்ல மெல்ல அறியலானார். இனிப் போகின்ற பணத்தைப் பிடித்துக் கொண்டுவரும்படி அதன் பின்னே விட்ட பணமும் ஓட்டம் பிடித்தது. எல்லாப் பக்கத்திலும் தொல்லை. இருந்தாலும், ஒருநாள் நல்லகாலம் வராமலா இருந்துவிடுமா என்ற நம்பிக்கையைக் கைவிடவில்லை.இருந்தநல்லகாலத்தை வீணாகக்கைவிட்டுவிட்டு அப்புறம் வரப்போகிற நல்ல காலத்திற்கு ஒரு நம்பிக்கையைவிடாமல் இறுகப் பிடித்துக்கொள்வதால் என்ன பயன்? கால்இருப்பவர்கள் வீசி நடப்பதற்கு உதவக்கூடிய ஓர் கைத்தடியாகலாம் நம்பிக்கை—முடவர்களுக்குக் கட்கதண்டமாக அது ஒருபோதும் உதவுவதில்லை.

போன பணம் போக மற்றதையெல்லாம் குன்றக்குடி குப்புசாமி ஐயர் தின்று தீர்த்துவிட்டார். அவருக்கு இருந்த நம்பிக்கையும் ஜீரணம் ஆகிவிட்டது.



பழைய பணக்காரர் என்பதற்கு அடையாளமாக அவருடைய வீடு மாத்திரம் அந்த ஊரிற்குள் சற்றே பெரியதாக இருந்தது. ஆனாலும், அதன் அஸ்திவாரத்திற்கு இரண்டு முழம் கீழிலிருந்து அதன் கூரைக்கு இரண்டு முழம் மேல்வரையிலும் கடன். அந்த வீட்டிற்குள் இனி விலைக்கு விற்கக்கூடிய பொருளாவது அடகுவைக்கக்கூடிய பொருளாவது ஒன்று கூட இல்லை. அவ்வூரிலிருந்த அத்தனைபேரிடத்திலும் கூலக்குடி குப்புசாமி ஐயர், 'சாயந்திரம் தருகிறேன், சாயந்திரம் தருகிறேன்' என்று கடன் வாங்கிவிட்டதால் இனி அவருக்குக் கடன் கொடுப்பவரும் ஒருவரில்லை. ஒரு காலத்தில் நகைகள் போட்டுக்கொண்டிருந்த அடையாளங்கள்கூட அவர் மனைவியின்மேல் மறைந்துவிட்டன. இப்பொழுது அவரும் அவர் மனைவி மக்களும் கட்டியிருந்த துணிகளில் நெய்த நூலைக்காட்டிலும் தைத்த நூலே அதிகம். நூல் ஏறுவதெல்லாம் கந்தைக்கு உறுதி ஆகலாம்; ஆனால், ஏற்ற இடம் இருக்கவேண்டுமே. அது இல்லாததால் இவர்களுக்கு மறு துணியும் இல்லை.

வீடு அடங்கலும் மூன்றுநாள் பட்டினி. ஒருவருக்குந் தூக்கம் வரவில்லை. பிள்ளைகள் அயர்ந்துகிடந்தன. தான் கால்வைத்த வேளை வீடு துடைத்துப் போயிற்று என்று அழுது அழுது சோர்ந்தனள் மனைவி. வியாபாரத்தில் எப்படி நஷ்டம்வர நேர்ந்தது என்பதைப்பற்றிச் சிந்தித்தவராய்ப் படுத்திருந்தார் கூலக்குடி குப்புசாமி ஐயர். ஊரெல்லாம்,தேசமெல்லாம், உலகமெல்லாம் ஒருநாளும் இல்லாத இந்தப் பணநெருக்கடி உண்டானபடியினால்தான் தன்னுடைய வியாபாரம் கெட்டுவிட்டதென்றமுடிவிற்குவந்தார். "ஊரும் உலகமும் எல்லாம் செல்வநிலை இப்படிக் கெட்டுவிட்டால் நான் மாத்திரம் எப்படி தலையெடுப்பேன்'' என்று தன்மேல் ஒரு குற்றமும் இல்லாதபடி நீக்கிக்கொண்டார். "மற்றவர் கையிலே பணமிருந்தாலல்லவோ என் வியாபாரம் நடக்கும். கையில் செல்வம் நிறைய இருந்தபோது அதை வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் உபயோகப்படுத்திப் பெருக்கிக்கொள்வதைவிட்டு, கண்டபடி செலவுசெய்து, வீட்டிலும் நகையிலும் நிலத்திலுங் கொண்டுபோய்ப் போட்டு, இப்பொழுது எல்லாரும் பணமில்லாமல் தவிக்கிறார்கள். புத்தியில்லாத இந்தப் பிச்சைக்கார பசங்களை எத்தனை உதையுதை யென்று உதைத்தாலும் என் மனம் ஆறாது''......இப்படி எண்ணிக்கொண்டிருந்தார் கூலக்குடி குப்புசாமி ஐயர்.

காலடிச் சத்தமொன்று கேட்டது. வீட்டிற்குள் விளக்கு இல்லை யாகையால் சுவரில் நிழல் ஆடவில்லை. இருந்தாலும், வீட்டிற்குள் திருடன் வந்திருக்கிறானென்பது அவன் ஒரு தீக்குச்சியைக் கிழித்தபோது தெரிந்தது. சிரித்தார். அவன் வேறு வீட்டில் திருடிக்கொண்டுவந்திருந்த எதையாகிலும் மறந்து வைத்துவிட்டுப் போனாலாகாதா என்று காத்திருந்தார்.

இந்தத் திருடன் அயலூரான், கூலக்குடிக்கு இவன் இதற்குமுன் வந்ததில்லை. அன்று இரவுதான் முதல். எந்த வீட்டிற்குள் நுழையலாம் என்று சுற்றி வந்தபோது, குப்புசாமி ஐயர் வீடு தென்பட்டது. மற்ற வீடுகளைவிட இது பார்வைக்குச் சற்றே பெரியதாகத் தென்பட்டதால், அன்றைய இரவு அவ்வீட்டிலே தன் வியாபாரத்தை நடத்த நினைத்தான். மேலும், அவ்வீடு அரவமும் அடங்கியிருந்தது.

உள்ளே நுழைந்தான். பெட்டியையுங் காணவில்லை பேழையையுங் காணவில்லை. ஒருவர் மீதாவது ஒரு திருகாணியும் இல்லாதது தெரிந்துகொண்டான். துணி உலர்த்துகிற கொடியும் அறுந்து தொங்குகிறது. "வீட்டின் வெளிப்புறத்தைப் பார்த்து மோசம்போனேனே, ஒரு இராத்திரி எனக்கு வீணாகப்போய்விட்டதே; என்ன செய்வது, சோற்றையாவது தின்றுவிட்டுச் செல்லலாம்'' என்று சமையல் அறைக்குள் சென்றான். அங்கே சோறு சமைத்த சாம்பல்கூட இல்லை. திருடனுக்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. இருந்தாலும், இந்தவீட்டில் காலணாவாவது கைப்பற்றாமல் போவதில்லை என்று நிச்சயம் செய்தான். கூலக்குடி குப்புசாமி ஐயர் இத்தனையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

காலணாவாகிலும் எடுக்காமல் திரும்புவதில்லை என்று நிச்சயம்கொண்ட அந்தத் திருடன், மெல்ல வந்து குப்புசாமி ஐயர் படுத்திருந்த தலையணையின் கீழ்க் கையைவிட்டுத் துழாவினான். வெறுங்கையே திரும்பியது. வெறுப்பிற்குங் கோபத்திற்கும் எல்லை எதுவென்று காண விரும்புகின்றவர் அப்பொழுது அந்தத் திருடன் முகத்தைப் பார்க்கவேண்டும். 'தூ' என்று வெறுப்புத் தோன்ற துப்பினான். கூலக்குடி குப்புசாமி ஐயருக்குச் சிரிப்பு வந்தது, சிரித்தும் விட்டார். இந்தச் சிரிப்பொலியைக்கேட்ட திருடனுக்கு மானம் போய்விட்டது. அச்சிரிப்பின் பொருளைத் தெரிந்துகொண்டான்.மூள்கின்றது கோபம். வந்தது வரட்டுமென்று, கூலக்குடி குப்புசாமிஐயரைத் தன் காலால் உதைத்து, "என்னைப் பார்த்துச் சிரிக்கவா சிரிக்கிறாயடா நீ. ஏ, பிச்சைக்காரப் பயலே, உனக்கு இந்த வீடு என்னடா ஒருகேடு. இப்படி வெறும்வீட்டைவைத்துக்கொண்டிருப்பதைவிடத் தூக்குப்போட்டுக்கொண்டு சாகப்படாதா நீ'' என்று மீண்டுந் துப்பினான்.

"அப்பாடா, உலகத்திலே செல்வநிலை குறைந்தபடியினால்தான் நானும் இந்தக் கதிக்கு வந்தேன். நான் வியாபாரம் செய்தேன்; நீ......'' என்று கூலக்குடி குப்புசாமி ஐயர் வாக்கியத்தை முடிப்பதற்குள் திருடன் அவர் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்துவிட்டுப் "போதாக் குறைக்கு என்னையும் உன் வியாபார இனத்தில் சேர்த்துப் பேசப் பார்க்கின்றாயோ, பிச்சைக்காரப் பயலே'' என்று கூறி மறைந்துவிட்டான்.

கூலக்குடி குப்புசாமி ஐயருக்கு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. மனைவி கண்விழித்து என்னவென்று கேட்டாள். "என்ன சொல்வேன், எங்கும் செல்வமில்லாக் குறைதானடீ எல்லாத்தொழிலிற்கும் தடையாயிருக்கின்றது'' என்று மீண்டுஞ் சிரித்தார்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை'' மருந்துகள்
"ஆல்மண்டைன்'' (டானிக்). "பாலக்ஸ்'' பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்'' (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மடச்யாவனப்ராசா மடமிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மடல் மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜவரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

# வர்த்தமானம்

ஜோசியம் அறிந்த பறவைகள்:—டர்ஹாமில் பீமிஷ் என்னும் இடத்தில் ஒரு பெரிய மரம் இருந்தது. இந்த மரத்தில் பரம்பரையாக ஐம்பது ஆண்டுகள் வரை, பல பறவைகள் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. ஆனால், ஒரு நாள் அப்பறவைகள் எல்லாம் ஒன்று கூடி எதைப்பற்றியோ ஆலோசித்தன. பிறகு எல்லாப் பறவைகளும் அம்மரத்தை விட்டுப் பறந்து போயின. அந்த மரத்தில் கட்டியிருந்த தங்கள் கூடுகளைக் கலைத்து வேறு ஒரு மரத்தில் கூடுகள் கட்டிக்கொண்டன. மீண்டும் பழைய மரத்திற்கு அப்பறவைகள் வரவே இல்லை. இங்ஙனம் பறவைகள் வேறு மரத்திற்குக் குடி போன சில நாட்களுக்குப் பிறகு அப்பழைய மரம் முறிந்து விழுந்துவிட்டது. இப்படி நேரும் என்று அப்பறவைகளுக்கு முன்னரே கடவுள் அறிவித்தார் போலும்!

*   *   *

ஒளி வீசும் உடம்பு:—இத்தாலியில் பிரானே ஆஸ்பத்திரியில் ஒரு பெண் நோயாளி தூங்கும் சமயத்தில் அவளது தேகம் ஒருவிதப் பிரகாசத்தோடு விட்டு விட்டு ஜொலிக்கின்றதாம். இது டாக்டர்களுக்கு இன்னதென்று புலப்படவில்லை அவளுக்கு க்ஷயரோக வியாதி. ஆயினும் இம்மாதிரியாக அவளுடைய தேகப் பிரகாசிப்பதற்குக் காரணம் தெரியவில்லை. அந்தப் பெண் தூங்கி விழித்ததும் தன்னுடைய கண்கள் கூசும்படியாக அவ்வளவு பிரகாசமுள்ள வெளிச்சம் தோன்றியதாகப் புகார் செய்துள்ளாள். டாக்டர்கள் மேலும் பரிசோதனை செய்துவருகின்றனர்.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.
Please apply for particulars to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
*Managers.*

27 அங்குலக் குதிரை:-நியூசௌத் வேல்ஸில்கோபார் என்னுமிடத்தில் 'டைனி' என்ற பெயருடைய ஒரு 27 அங்குல உயரமுள்ள குதிரைக்குட்டி ஒன்றிருக்கிறது. அதை எந்த வீட்டிற்குள்ளும் நாய்க்குட்டியைப் போல் அறைக்குள்ளே விளையாடச் செய்யலாம். அங்குள்ள மேசை நாற்காலி சாமான்கள் ஒன்றும் அசைய மாட்டா. அக்குதிரைக்குட்டி ஒரு ஸ்திரீயின் மடியில் சுகமாகப் படுத்துத் தூங்குகிறது. அதற்குத்தேகத்தில் அடர்ந்த ரோம மிருப்பின் எவரும் அதனை நாய்க்குட்டி என்றே எண்ணுவார்கள். அதை ஈன்ற குதிரைகள் சாதாரண உயரமுடையன. அக்குட்டி மாத்திரம் விசித்திரப் பிறவி. சிறுவர்கள் யாரேனும் அதனிடஞ் சென்று விஷமஞ் செய்தால் அதன் குதிரைக்குணம் வெளிப்பட்டுவிடுகின்றது. கண்களிற் பொறி பறக்கக் கால்களை உதைத்துக்கொண்டு துள்ளிக் குதித்துக் கழுத்தைஆட்டித் தன்மேல் ஏறுஞ் சிறுவர்களை அது கீழே தள்ளிவிட முயலுகிறது. அக்குதிரையை ஒரு ஏழுவயதுச் சிறுமி வளர்த்துவருகிறாள். அவள் சொல்வதை யெல்லாம் அது அறிந்துகொண்டு அதற்கேற்ப நடக்கிறது. காலைத் தட்டி ஓசைப்படுத்திக்கொண்டு அது இலக்கங்களை எண்ணுகிறது. தட்டிகளையும் மேடுகளையும் எஜமானி சொற்படி தாவுகிறது.

*   *   *

நாயகியும் நாயும்:—அமெரிக்கா கலிபோர்னியாவில் ஒருவர் அருமையாக ஒரு நாயை வளர்த்து வருகின்றார். அவருக்குத் தமது மனைவியை விட அந்த நாய் மீது அதிக அன்பாம். ஒருநாள் அவர் விளையாட்டுப் போக்கில் தமது மனைவியிடம் அந்த விஷயத்தைச் சொன்னாராம். உடனே அந்த அம்மாளுக்குக் கோபம் பிறந்துவிட்டது. அசனல் அந்தக் கணவனுடன் வாழ முடியாதென்று நீதிஸ்தலத்தில் விவாகரத்து வழக்குத் தொடர்ந்திருக்கிறாள்.

*   *   *

90 வயதுக்குமரர் விவாகரத்து:-அமெரிக்காவில்மிச்சிகான் என்னும் இடத்தில் எப்ராயிம் பிரௌன் என்பவர் வாலிபத்தில் கலியாணஞ் செய்துகொள்ளவில்லை. கலியாணம் பரம சங்கட மென்றும், ஒருபெரிய தொல்லை யென்றும் நினைத்துக் கலியாணஞ் செய்து கொள்ளாம லிருந்தார். வயதாக ஆக அவருக்குக் கலியாண ஆசை வந்தது. அவருக்கு 88 வயதில் 70 வயதுக் கிழவி ஒருத்தியைக் கலியாணஞ் செய்துகொண்டார். கலியாணமாகி இரண்டு வருஷங்கள் கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அவருக்கு இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. மனைவியை விவாகரத்துச்செய்ய வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

சோடையின் கொடுமை
நீங்கள் ஆயுர்வேத முறைப்படி செய்யப்பட்ட
எங்களுடைய
மணி தைலத்தை
உபயோகித்தீர்களா?
மூளையைக் குளிரச்செய்து கை கால் கண்களின் எரிச்சலைச் சமனஞ்செய்து தலை மயிரை நீண்டு வளரும்படி செய்யும். உடனே வாங்கி உபயோகியுங்கள்.
5 தலம் தைலங் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 1.
இனும்! கேட்லாக். இனும்!!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)